# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 35-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### உபயோகமற்ற துப்பாக்கிகள்

உபயோகமற்ற துப்பாக்கிகளைக் கடலில்எறிந்துவிடுவதென்று அரசாங்கம் முன்னர்செய்திருந்த தீர்மானத்தைத் தற்போதுமாற்றியிருக்கிறது. இந்தத்துப்பாக்கிகளிலே பாவிக்கக்கூடியவைகள் லைசென்ஸ்பெற்றவர்களாய் அவசியம் தேவைப்படுகிறவர்களுக்கு விற்கப்படும். பாவிக்கமுடியாதவைகள் அரசாங்க தொழிற்சாலைக்கு அனுப்பி அழித்துவிடப்படும்.

### சீனித் தொழிற்சாலை

கல்லோயா — கந்தளாய்ப்பகுதியில் சீனித்தொழிற்சாலைகளை அமைக்குமாறு நடைபெற்று வரும்வேலைகள் அடுத்தவருடம் ஆடிமாதத்தில் பூர்த்தியாகிவிடுமென்று கைத்தொழில்-கடற்தொழில்மந்திரி தெரிவித்திருக்கின்றார். இந்தத்தொழிற்சாலைகளில் ஒவ்வொன்றும் 20,000 தொன்சீனி உற்பத்திசெய்யுமென்றும், தற்போது பிறநாடுகளிலிருந்து வருடம் ஒன்றுக்கு 1,35,000 தொன்சீனி இறக்குமதிசெய்யப் படுகிறதென்றும் அவர்கூறியிருக்கின்றார்.

### உபதியாக்கோன்பட்டம்

கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள லங்காமாதாவின் தேசிய குருமடத்திலே சென்ற 8-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை திரிகோணமலைமேற்றிராணியாராகிய மகாவந் இக்னேஷஸ் கிளென்னிஆண்டவராலே குருத்துவ மாணவர்கள் பன்னிருவருக்கு உபதியாக்கோன்பட்டம் அருளப்படலாயிற்று. இவர்களில் வண. இம்மனுவேல் செல்வராஜா, வண. எஸ். [illegible]குணசீலன், வண. பெனெற்றி கொன்ஸ்ரன்ரின் எனும் பிறதர்மார்மூவரும் யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்கள்.

### சமயஸ்தாபன பாடசாலைகள்

"அரசாங்கம் சமயஸ்தாபனபாடசாலைகள் சகலத்தையும் பொறுப்பேற்று நடத்தவேண்டுமென்றயோசனை ஓர் விசாரணைக்கமிற்றியால் சமர்ப்பிக்கப்பட்டது; இந்தயோசனைக்கு ஓர்முதல் நடவடிக்கையாக அது சம்பந்தமான செலவுகள்பற்றிய விபரங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன; இந்தயோசனைசம்பந்தமான சிக்கல்களைப் பரிசீலனைசெய்யாமல் அரசாங்கம் இந்தப் பிரச்சினைபற்றித் திடீரென ஒருமுடிவுஞ்செய்யாதென்று உங்களுக்குநான் உறுதிவாக்களிக்கிறேன்; இந்தயோசனை அரசாங்கத்தால் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமுன் அதைப் பூரணமாகப்பரிசீலனைசெய்வதற்கெனக் கல்விமான்களைக்கொண்ட ஓர்கோஷ்டியை நியமிக்க நான் தயங்கமாட்டேன்; இதுசம்பந்தமாக நான் துரிதமாகத் திடீரென்று ஓர்முடிவுக்குவர இடமளிக்கமாட்டேன்; ஆகவே, இப்பிரச்சினைபற்றி எவரும் எத்தகைய அச்சமும் கொள்ளவேண்டியதில்லை" என்று சென்ற 8-ந்திகதி கடுகாஸ்தோட்டை அர்ச். அந்தோனியார் கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் கல்விமந்திரி திரு. டபிள்யு. தஹநாயகா கூறியிருக்கின்றார்.

### இரட்டைக் குழந்தைகள்

"கமமும், கைத்தொழிலும் இரட்டைக் குழந்தைகள் போன்றவை; இவைகளை நா[illegible]கணித்து விடமுடியாது; நமது முன்னோர்கள் சீரான வாழ்க்கை நடத்தினார்களென்றால், அதற்குக்காரணம் அவர்கள் கைத்தொழிலையும், கமத்தொழிலையும்போற்றிப் பாதுகாத்தமையேயாகும் என்று வடமாகாணஅதிபர் திரு. எம். ஸ்ரீகந்தா அவர்கள் அனலைதீவுக் கிராமமுன்னேற்ற சங்கத்தால் அமைக்கப்பட்ட நெசவுசாலையைச் சென்ற 9-ந்திகதியன்று திறந்துவைத்துப் பேசுகையில் கூறலாயினர்.

### கன்னியாஸ்திரிகளான தாதிமார்

"கன்னியாஸ்திரிகளான தாதிமார்களின் தன்னலங்கருதாச் சேவையை இந்நாடுஎன்றும் பாராட்டக்கடமைப்பட்டுள்ளது; அவர்களின்சேவை மிகவும் அவசியமானது; அரசினர் அவர்களைப் புறக்கணிக்கக்கருதுவது நீதியாகாது; கன்னியாஸ்திரிகளான தாதிமார்களின் அயராஉழைப்பின்மூலம் எத்தனையோ ஆஸ்பத்திரிகள் இன்று சிறப்பாக விளங்குகின்றன; ஏழைமக்களின் உற்றதுணைவர்களாய் விளங்கும் இந்தத்தாதிமார்கள் இல்லாவிட்டால் எத்தனையோ ஆஸ்பத்திரிகள் சீரடையமுடியாதென்று மக்கள் கூறுவதை நான் நேர்முகமாகவே கேட்டுள்ளேன்; இன்றையஅரசினர் கன்னியாஸ்திரிகளான தாதிமார்களின் சேவையை ஒதுக்கித்தள்ளநினைப்பது நீதியாகமாட்டாது" என்று ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. கந்தையா அவர்கள் பத்திரிகைநிருபர்ஒருவரிடம் தெரிவித்திருக்கின்றார்.

### வெலிமடை உபதேர்தல்

சனப்பிரதிநிதிகள்சபையிலே காலியாயிருந்த வெலிமடை ஸ்தானத்துப் புதியபிரதிநிதியைத் தெரிவுசெய்வதற்கான இடைத்தேர்தல் சென்ற சனிக்கிழமை நடந்தேறியது. இதிலே அத்தொகுதியின் முன்னைநாள் பிரதிநிதியான திரு. கே. எம். பி. இராஜரத்தினவின் மனைவியான திருமதி குஸுமா இராஜரத்தின 14,069 வாக்குகளைப்பெற்று வெற்றிபெறலாயினர். இவருடன் போட்டியிட்டவர்களில் திரு. எம். பி. ஏ. ஜயசுந்தராவுக்கு 2,616 வாக்குகளும், திரு. கே. ஏ. தல்பதாதுவுக்கு 642 வாக்குகளும் கிடைத்தன. அதனால் திருமதி குஸுமா இராஜரத்தின 11,453 அதிகப்படியான வாக்குகளைப்பெற்றுத் தன்னுடன்போட்டியிட்ட இருஆடவர்களையும் தோற்கடித்திருக்கின்றார். பிந்தியவர் தனது கட்டுப்பணத்தையும் இழந்தார். புதிதாக ஓர் பெண்பிரதிநிதி தெரியப்பட்டமையாலே சனப்பிரதிநிதிகள்சபையிலுள்ள பெண்பிரதிநிதிகள்தொகை நான்காக அதிகரித்துள்ளது. எம். ஈ. பி. அரசாங்கம் பதவிக்குவந்தபின் நடைபெற்ற முதலாவது இடைத்தேர்தல் இதுவாகும்.

### பொலிஸ்காரருக்கு நஷ்டபரிகாரம்

இவ்வருடம்கொலையுண்ட ஐந்து பொலிஸ்காரரிலும் தங்கிவாழ்ந்தவர்களுக்கு நஷ்டபரிகாரம்வழங்கப் பொலிஸ்பகுதியைச்சேர்ந்தவர்கள் சகலரும் தங்கள்பதவிக்குஏற்றவாறு குறிக்கப்பட்டுள்ளபணத்தொகையைக் கொடுப்பதெனத் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்கென்று கெசற்றில்பெயர்வெளிவந்த பொலிஸ்சுப்பிறின்ரெண்டன்மார் தலைக்குப் 15ரூபாவும், பொலிஸ்இன்ஸ்பெக்றர்மார் 10ரூபாவும், பொலிஸ்சார்ஜன்மார் 5ரூபாவும், பொலிஸ்காரர் 2ரூபா 50சதமும் கொடுக்க வேண்டுமென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

### டக்றர் இம்மனுவேல் பற்றிக்

மேல்மாகாணத்திலே பதில்வைத்திய அதிகாரியாகவும், காலி, அம்பலாங்கொடை, கந்தானைசயரோக ஆஸ்பத்திரி, யாழ்ப்பாண அரசினர்ஆஸ்பத்திரி, குருநாகலிலே கோகறலைமுதலாம் இடங்களிலே வைத்தியஅதிகாரியாகவும் கடமைபார்த்துவந்தவரான டக்றர் இம்மனுவேல் பற்றிக்அவர்கள் அரசாங்கசேவையை இராசினாமாச்செய்துவிட்டு, வைத்தியகல்வி மேலும்கற்பதற்கெனச் சென்ற9-ந்திகதி விமானமார்க்கமாகப் பிரித்தானியதேசம் சென்றிருக்கிறார். இவர்அங்கே மூன்றுவருடங்கள்வரை தங்கியிருந்து வைத்திய கல்வி கற்றுவருவாரென அறிகின்றோம்.

### பொலிஸ்காரனைக் கொலைசெய்தவன்

பள்ளிவத்தைப் பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றிவந்த பொலிஸ் கன்ஸ்ரபிள் ஆறுமுகத்தைக் கொலைசெய்துவிட்டுத் தலைமறைவாக இருந்துவந்தவனாகக்கூறப்படும் பி. ஜி. தெபானிஸ் சென்ற 7-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் பெல்மதுளையில் கைதுசெய்யப்பட்டான். அம்பலாங்தோட்டைப் பொலிஸைச்சேர்ந்த சார்ஜன் பி. ஜே. சில்வா அன்றுதினம் கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்தபோது, பெல்மதுளையிலே ஒருவர் அவரைக்கண்டு தெபானிஸ் அங்குகிரிவதாகக் கூறவே, அவர் அவனைக்கைதுசெய்து இரத்தினபுரிப்பொலிஸரிடம் ஒப்படைத்தார்.

### வகுப்புத்துவேஷ பிரசுரங்கள்

சகல சிங்களவர்களையும் போராட்டத்துக்குத் தயாராகுமாறு கேட்டுக்கொள்ளும் சுவரொட்டி விளம்பரங்களும், துண்டுப்பிரசுரங்களும் தெல்தேனியாப்பகுதியிலே ஏராளமாக வழங்கப்பட்டுவருவதாய்ச் செய்திகிடைத்திருக்கிறது. "பிரதமர்—சமஷ்டிக்கட்சி ஒப்பந்தத்தின் சதித்திட்டத்திலிருந்து சிங்களசமுதாயத்தைக் காப்பாற்றுவதற்காக" ஐப்பசிமுதலாந்திகதியன்று ஆரம்பமாகும் ஹர்த்தாலில்சேருமாறு இந்தவிளம்பரங்கள், பிரசுரங்களாலே சிங்களவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். சிங்கள ஜாதிக பால மண்டலய என்ற ஸ்தாபனமே அவைகளை வெளியிட்டிருக்கிறது.

### தற்கொலைகளின் பெருக்கம்

இலங்கையிலே தற்கொலைகள் வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. கடந்தமூன்றுவருடங்களிலும் தற்கொலைகள்முறையே 540–549–583 என்று அதிகரித்து வந்திருக்கின்றன. சென்றவருடம் தற்கொலைசெய்துகொண்டவர்களில் 245பேர் தூக்கிட்டும், 121பேர் பாஷாணம்உட்கொண்டும், 79பேர்நீரில்அமிழ்ந்தியும், 38பேர் ஓடும்றெயின்வண்டிகளுக்குக் குறுக்கேபாய்ந்தும், 26பேர் துப்பாக்கிகளால்சுட்டும், 14பேர்தங்களைத்தானே வெட்டியும், 65பேர் பிறவழிகளைக் கையாண்டும் தங்கள்உயிருக்கு உலைவைத்துக்கொண்டார்கள். இவ்விதம் சென்றவருடத்திலே தற்கொலைசெய்துகொண்டவர்களில் ஆடவர்கள் 408பேர். இவர்களிலும் 20முதல் 25 வயதுவரையிலுள்ள இளைஞர்கள்தான் அதிகமானவர்கள். வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, மூளைக்கோளாறு, விரும்பியவாறு கலியாணஞ்செய்துகொள்ள முடியாமற்போயினமை, பரீட்சைகளில்தவறியமையே இவர்கள் தற்கொலைசெய்துகொள்ள முக்கியகாரணங்களாகும்.

### பரிதாபகரமான வான்விபத்து

மாத்தறையிலே கொட்டுவகொடையைச் சேர்ந்தவரும், புறக்கோட்டை வர்த்தகருமான ஜனாப் எஸ். எம். பி. எம். ஷபீக்என்பவர்இறந்துபோன தமது சகோதரரான ஜனாப் எஸ். எம். புகாரியின் பிரேதத்தைச் சென்ற 8-ந்திகதியன்று கொழும்பிலிருந்து ஓர் வானிலே மாத்தறைக்குக் கொண்டு சென்றபோது, வழியிலேவான் வீதியை விட்டுவிலகி ஓர்தென்னமரத்துடன் மோதி விபத்துக்குள்ளாயிற்று. அதனால் சகோதரரின்பிரேதத்தை ஏற்றிச்சென்ற சகோதரரான ஷபீக்கும் இறந்துபோயினார். இவருடன் அந்தவானில்சென்ற 11பெண்களும், 2ஆண்களுமாக மற்றும் 13பேர் காயமடைந்து, காலிஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். இவர்களும், மூன்றுபெண்கள்உட்படக் காயமுற்ற நால்வர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பூசாஎன்ற இடத்தினருகே வான் சென்றுகொண்டிருந்தபோது வீதியோரமாக ஒருதாய் 12வயதுள்ள அநுலாவதிஎன்ற தனதுமகளை அடிக்க, அவள் அடிதாங்கமாட்டாது வீதியின் குறுக்காய் ஓடிச்செல்லவே, அவள் வானுக்குள் அகப்படாதிருக்குமாறு சாரதிபிறேக்போட்டு வானைஇடதுபுறமாகத் திரும்பியபோது அது வீதியை விட்டுவிலகி மரத்திற்போய் மோதியதாகச் சொல்லப்படுகிறது. விபத்திலே வான்முற்றாகச் சேதமடைந்தது. சாரதியுடன் முன்ஆசனத்தில்இருந்த 35வயதுடைய ஷபீக் வான்மரத்தில் மோதியபோது நையுண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்படும்வழியில் இறந்துபோயினார். காயமுற்ற 13பேர்களில் மூன்றுமுஸ்லீம்பெண்களும், ஒருகுழந்தையும் அன்று பிற்பகல் கொழும்பிலுள்ள அரசினர்பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுகுண்டு அதிசயம்

அணுகுண்டு இரகசியத்தைக் கண்டுபிடிக்கச் செலவென்ன தெரியுமா? 20,00,00,000 டலர். நூறு சதுரமைலுள்ள மூன்று இடங்களில் மூன்றுலட்சம்பேர் இரவும் பகலும் உழைத்து, இந்தஅருமையான உலக நாசக்குண்டைக் கண்டுபிடித்து, ஹிரோஷிமாவேலையை — அதாவது பரிநாசவேலையைச் செய்தனர். ஹிரோஷிமாஎன்பது உலகில் முதன்முதலாக அணுகுண்டு வீசப்பட்ட ஜப்பானிய நகராகும். இதே அணுவேலையை ஜேர்மனியில் ஹிற்லரும் செய்தார். வேலைமுடிந்திருந்தால் இன்று ஐரோப்பாவே வேறுவிதமாக இருந்திருக்கும். யாராவது அவரிடம் ஐரோப்பாவைப் பரிசாகவும் பெற்றிருக்கலாம். நல்லவேளையாக அதற்குள் அவர்பாடு முடிந்தது. அதே அணுஇரகசியத்தை இன்று ருஷியா பயன்படுத்த ஆராய்கிறது. ஜேர்மனி அணுகுண்டு செய்வதாக அறிந்ததும் இங்கிலாந்து தனதுநிபுணர்களை அமெரிக்காவுக்கு உதவி, அணுகுண்டு வேலையைத் துரிதப்படுத்தியது. ஐந்துஆண்டுகளாக அறிவியற்புலவர்கள், கல்லூரிகள், தொழிற்சாலைகள்எல்லாம் பாடுபட்டு முடிவில் குண்டு வெளிப்பட்டது. அணுகுண்டுப்புராணம் முப்பது பெரியதொகுதிகள் அடங்கிய மிகப்பெரிய நூலாகக் கலாநிதி சிமித்என்பவரால் ஆக்கப்பட்டுள்ளது. பெகறேல்என்னும் பிரான்சிய அறிவியற்புலவர் "யூறேனியம்" சோதனை நடத்தினர். மதம் கூறிஎன்னும் மாதும் பிட்ச்பிளெண்டிலிருந்து "றேடியம்" கண்டாள். றுதர்போட்என்பவர் அணுச்சோதனை நடத்தினர். அக்காலத்திலேயே அணுக்குண்டுக்கு அங்குரார்ப்பணம்ஆனது. 1905-ம்ஆண்டு ஈன்ஸ்ரின் 'நிட்ப'மும், 'சக்தி'யும் சமம் என்றும், ஒன்று மற்றொன்றாக மாறும் என்றும் கணக்குப் போட்டுக் கண்டார்.

ஈ—எம், சி 2 என்பது அவர் கணக்கில் புகழ்பெற்றது.

ஈ—சக்தி. எம்—சக்திஅளவு. சி—ஒளிவேகத்தின் சென்ரிமீற்றர்அளவு.

ஒளிவேகம் ஒருவிநாடிக்கு3,00,000 கிலோ மீற்றர். ஒருசிறிய வஸ்துவைச் சக்தியாக மாற்றினாலும், அதுபெரிய அளவில் பரவி வேலைசெய்யும் ஒரு கிலோக்கிறாம் பொருளைச் சக்தியாக்கினால் அது 500,00,00,000 கிலோவாற் சக்தியாகும். அது இரண்டு மாதம் அமெரிக்காமுழுதும் உண்டாகும் மின்சாரசக்திக்குச் சமம். ஒரு கிலோக்கிறாம் நிலக்கரியைஎரித்தால் 8·5கிலோவாற் சூடுண்டாகும் பொருளின் நிட்பத்திற்கேற்றபடி சக்தியும்எழுந்துபரவும் என்பதை ஈன்ஸ்ரின் கண்டுபிடித்தார். இந்தக்கணக்கைக்கொண்டு மதம் கூறி என்றமாது கண்ட றேடியத்தை நிபுணர்கள் சோதித்தனர். றுதர் போட் அவர்களுள்சிறந்தவர். அவரே 1919-ம் ஆண்டு றேடிய அணுசக்தியைப் பல வகையில் ஆராய்ந்து நுட்பஅணுவை அதிநுட்பமாக உடைப்பதால்வரும் அபாரமான ஆற்றலைக்கண்டார்.

அநேக இடைஞ்சல்கள் ஏற்படக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன; எனவே, இந்தவேளை நம்தாயர்லா மன்றாடிவரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். பின்னர் நோயாளிகளை ஆசீர்வதித்தார். காலை 9-30மணிக்குக் கொடி இறக்கப்பட்டதும் ஆண்டவர் அடியார்கள் யாத்திரிகர்களையும், ஏனையவர்களையும் ஆசீர்வதித்தார்.

திருநாளுக்குமுந்திய ஒருவாரகாலமாக ஆலயமும், ஆலயவீதியும் மெர்க்கூரிவிளக்குகளால் தீபாலங்காரஞ்செய்யப்பட்டிருந்தன. ஆலயம் வாசமலர்களால்அலங்கரிக்கப்பட்டிருந்தது. சகலதிருச்சடங்குகளும் ஒலிபெருக்கிகள்மூலம் நிறைவேறின. இறுதியில் மதியபோசனம் அளிக்கப்பட்டது. திருநாளில்கலந்துகொண்ட பெருந்திரளானவிசுவாசிகள் ஆலயகட்டிடத்துக்கெனக் கற்கள்வாங்கி உதவினர், விசேஷ நன்கொடைகளும் வழங்கினர். திருநாளுக்கு முந்தியகாளும், திருநாளன்றும் தேநீர்வழங்கிய தேநீர்ப்பிரசார சபையினருக்கும், இருநாட்களிலும் தமதுபஸ்சேவை தந்துதவிய "ஊவா பஸ்" கம்பனியாருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

# மட்டக்களப்பு தாண்டவன் வெளித்தபால்

**பரிசுத்த சதாசகாயமாதா திருப்பதி 2-வது ஆண்டுவிழா:** திரிகோணமலை மேற்றிராசனத்திலே தாண்டவன்வெளிப்பங்கின் ஓர்பகுதியாகத்திகழும் உன்னிச்சைக் குடியேற்றதிட்டத்தில், ஆயித்திய-மலை என்னும்இடத்தில் எழுந்தருளியிருக்கும் பரிசுத்த சதாசகாயநாயகியின் முதலாவதுஆலயத்தின் 2-வது ஆண்டு விழா பங்குவிசாரணைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமிகளின் அயராமுயற்சியாலும், விசுவாசிகளின் ஒத்துழைப்பாலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

முதலாவதுதிருநாளுக்கு முந்திய நாளாகிய 1-9-56 சனிவாரம் பங்குவிசாரணைக்குரவரால் ஆலயம் ஆசீர்வதிக்கப்பட்டு முதற்பூசைநிறைவேறியது. 2-9-56 ஞாயிறுவாரம் திரிகோணமலைமேற்றிராணியாரான மகாவந். இக்னேஷியஸ் கிளெனி ஆண்டவர் இத்திருப்பதியில் முதற்பூசை நிறைவேற்றினார். 2-வதுதிருநாளாகிய சென்ற 1-9-57 ஞாயிறுவாரம் காலை 7-30 மணிக்குப் புதியஆலயத்துக்கு அத்திவாரக்கல் நாட்டினார்.

திருநாளுக்கு ஆயத்தமாக 18-8-57 ஞாயிறுவாரம் காலை 7-30 மணிக்கு சுவாமிகளால் ஆலயவீதியில் கொடியேற்றும்வைபவம் நிகழ்ந்தது. பின்னர் திவ்வியபூசைநிறைவேற்றித் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. அன்றுமுதல் 31-ந்திகதிவரை நோவனைகள் இலங்கையின் பலபகுதிகளிலுமுள்ள நேர்த்திக்காரராலும், விசேடமாய்த் திரிகோணமலைமேற்றிராசன விசுவாசிகளாலும் சிறப்பாய்க் கொண்டாடப்பட்டன. நாள்தோறும் மாலை 6-30மணிக்குச்செபமாலை, பிரார்த்தனை, மாலையாராதனையுடன் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டுவந்தது. 31-8-57 சனிக்கிழமை மாலை 7-30மணிக்குத் திருப்பதிக்குவரும் யாத்திரிகர்களின் சேமத்துக்காகச் சதாசகாயநாயகியை மன்றாடிக்கொண்டு திவ்வியபூசை நிறைவேறியது. அன்றுகாலை 10மணிக்கு சதாசகாயநாயகியின் நவநாட்செபம் சகல விசுவாசிகளாலும் சொல்லப்பட்டது. பின்னர் சுவாமிகள் "கிருபைதயாபத்திற்கு மாதாவாயிருக்கிற எங்கள்இராக்கினியேவாழ்க" என்பதுபற்றி அருமையான ஓர்பிரசங்கஞ்செய்து தேவநற்கருணை ஆசீர்வாதம்அருளினார். அன்று மாலை 7-00மணிக்குச் சதாசகாயநாயகியை எழுந்தருளச்செய்து விசுவாசிகள் மெழுகுவர்த்திகள்ஏந்தியவர்களாய் மாதாவின் தோத்திரகீதங்கள் பாடியும், செபமாலைகள்ஓதியும் அணியாய்வர மாதா ஆலயவீதியினூடே மக்களுக்கு அருள்புரியும் முகமலர்ச்சியுடன் எழுந்தருளிவந்தார். பின்னர்ஆலயத்தில் மாதாவைஎழுந்தருளச்செய்தனர். தொடர்ந்து வண. பிரான்சிஸ் செலர் சுவாமிகளும் வண. எல். அல்பகூக் சுவாமிகளும், உதவிபுரிய, சுவாமிகளால் மாலையாராதனைபாடித் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

திருநாளன்று காலை 5மணி தொடக்கம் மூன்று திவ்வியபூசைகள்நிறைவேற ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. காலை 7 மணிக்கு விசுவாசிகள் அனைவரும் ஆயித்தியமலைச்சந்தியில் மகாவந். மேற்றிராணியாண்டவரை வரவேற்று மலர்மாலை அணிவித்துப் பவனியாக ஆலயத்துக்கு அழைத்துவந்தார்கள். அவர் புதியஆலயத்துக்கு அத்திவாரக்கல் நாட்டித் திவ்வியபூசைநிறைவேற்றித் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளினார். பூசைவேளை அவர் தமதுபிரசங்கத்திலே "நமதுமேற்றிராசனத்தில் ஓர்யாத்திரைப்பதி இல்லாதிருந்த குறையைச் சதாசகாயநாயகி தீர்த்துவைத்தார்; விசுவாசிகள் எப்போதும் இப்பதிக்கு யாத்திரைசெய்து மாதாவின் ஆசியைப் பெறவேண்டு"மெனக் கூறி, மேலும் இன்றைய அரசியற்சூழ்நிலையைநாம்கவனிக்குமிடத்து, நமக்கு

# தனிச்சிங்களமும் சிங்களவரும்

## சமாதானத்துக்கு வழிவகுப்பது சம அந்தஸ்தே!

— புத்தபிக்கு தர்மபால தேரோ —

"புத்தபெருமானின் பொன்மொழிப்படிநடந்து புனிதமடைந்து உலகசமாதானத்திற்காகப் பாடுபடவேண்டிய நமதுநாடு இன்று அமைதியற்று ஒரே கொந்தளிப்பான நிலையில்இருப்பதை உணரும்போது மிகவும்வேதனைப்படவேண்டியிருக்கிறது. புத்தபெருமானின் பொன்அடிகளைப் பின்பற்றிச் சமாதானத்திற்காக உழைக்கவேண்டிய பிக்குகள்தானும் நாட்டின் அமைதியற்றநிலைக்குக் காரணமாகநிற்பது மிக மிகவருந்தத்தக்கது. சிங்களவரும், தமிழரும் மொழியில் அல்லது மதத்தில் வேறுபட்டிருந்தாலும் கலாசாரத்திலும், சமயவழிபாட்டு முறைகளிலும், மற்றும்பல சமூகத்தொடர்புகளிலும் மிகநெருங்கிய ஒற்றுமைஉள்ளவர்கள். இலங்கையில் சிங்களவர்கள் எவ்வளவு தூரம் உரிமை பாராட்டுகிறார்களோ தமிழருக்கும் அவ்வளவுதூரம் உரிமை உண்டு. அன்றியும் ஆங்கிலேய ஆட்சிக்காலத்துக்கு முன்னிருந்தே இவ்விருவகுப்பாரும் ஒரேதாய்வயிற்றுச் சகோதரர்கள்போல் வாழ்ந்துவந்திருக்கின்றனர். சமீபத்தில்ஏற்பட்ட மொழிப்பிரச்சினை இவ்விருசமூகத்தையும் பிளவுபடுத்திவிட்டது என்றுமட்டும் கூறமுடியாது. ஒருவருக்கொருவர் எதிரியாகவும் மாறிவிட்டனர். மிகவும் சுமுகமாகத் தாராள தன்மையோடு நீதியைஉணர்ந்து செய்யவேண்டிய ஒரு விஷயம் இங்ஙனம் மனக்கசப்பாகும்நிலைக்கு வந்தது நமதுதுரதிஷ்டமே. சிங்களப்பெருமக்கள் தமிழுக்குச் சமஅந்தஸ்துக்கொடுக்க மறுப்பது நியாயமற்றசெயலாகும். எங்கள்உரிமையை நாங்கள்பெற்றுக்கொள்வதுபோல் மற்றவர்களின்உரிமையையும் கொடுப்பதே புத்ததருமம்என்பதை இவர்கள் மறந்துவிட்டனர். இலங்கையில்உள்ளவை இருமொழிகள். இவற்றை அரசாங்கமொழிகளாக்குவதில் யாருக்கும் கஷ்டம்நேர்ந்துவிடாது. தமிழுக்குச் சமஅந்தஸ்துக் கொடுப்பதன்மூலம் சிங்களம்அழிந்துவிடுமென்பது சிந்திப்போர் ஒப்புக்கொள்ளமுடியாத ஒரு கூற்று. தமிழ் சிங்களத்தை அழித்துவிடுமெனில், 65 லட்சம்சிங்களமக்கள் தூங்கிக்கொண்டிருக்கப் போகின்றனரா? இவர்கள் தங்கள்மொழியையும், கலாசாரத்தையும் கண்ணுங்கருத்துமாக வளர்த்துவருகையில் இவ்விதபயம்கொள்ள வேண்டியவர்கள் தமிழர்களே.

"தமிழ்மொழி தமிழருடைய பிறப்புரிமை. இதைஇழந்து அவர்கள் திருப்தியடையப் போவதில்லை. ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள மக்கள் அரசாங்கம் தொன்றுதொட்டு இந்த நாட்டில் வசித்துவரும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு உரிமைவழங்கவேண்டியதன் அவசியம்பற்றி நன்கு அறிந்திருக்கிறார்கள். மனச்சான்றுக்கு எதிராக அவர்கள் நடந்துகொள்வதால் நமது சகோதரர்களின் உரிமையை வழங்க வேண்டுமென்று கேட்கிறேன். நமது பிரதமர் பண்டாரநாயகா ஜனநாயகம் என்றால் என்னஎன்பதுபற்றி நன்கு அறிந்தவர். ஒரு அறிவாளி. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிக்கும் விஷயத்தில் ஒருபோதும் சம்மதியார் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. எனவே, இறுதிவரை தமிழர்களின் நியாயமானஉரிமைகளை வழங்குவதற்குப் பின்நிற்கமாட்டாரென எதிர்பார்க்கிறேன். இலங்கை ஒருசிறியநாடு. இங்குள்ளார்அனைவரும் சகோதரர்களாக ஒற்றுமையுடன் வாழ்ந்தால்தான் நாடு முன்னேறுமேயன்றி இவ்விதபிரச்சினைகளால் ஐக்கியம் சீர்குலையும்போது நாட்டின்முன்னேற்றத்திற்கு அழிவே ஏற்படும். சிங்களமக்கள் எல்லோருமே தனிச்சிங்களசட்டத்தை ஆதரிக்கிறார்கள்என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழுக்குரியஅந்தஸ்தை வழங்கவேண்டும். சகோதர மொழிகளாகத் தமிழும், சிங்களமும் திகழ வேண்டும் என்பதை ஆதரிக்கும் எத்தனையோ சிங்களமக்கள் இருக்கிறார்கள்.

"நியாயசிந்தையுள்ள சிங்களமக்களின் ஆதரவையும் தமிழ்மக்கள் இழந்துவிடக்கூடாது. சென்றஆடியில் நடைபெற்றகலகத்தைச் சற்றே உற்றுநோக்கும்போது அதுமிகமிக வருந்தவேண்டியவிஷயம். ஆத்மீக வழிபாடுகளிலிருந்துதவறி லோகாயதப்பிரச்சினைகளில்ஈடுபட்ட பிக்குகள் துப்பாக்கிகொண்டு கலகம்செய்தும், தீவைத்தும், துணிமணிகளைக் கொள்ளையடித்தும் பலஅக்கிரமங்களைச் செய்தனர். புத்தபெருமான் இதைத்தான் கூறினாரா? என்று சிங்களச்சகோதரர்களைக் கேட்கிறேன்? அன்பே இறையெனப்போற்றும் சிங்களமக்கள் இவ்விதகோரச்செயல்களில் ஈடுபட்டது புத்ததர்மத்துக்கே சவால் விடுவதாகத் தோன்றுகிறது. எனவே, இவ்விதமான துர்ப்பாக்கியநிலைகள் இனியும்நிகழ்ந்துவிடாவண்ணம் தமிழுக்கும், சிங்களத்துக்கும் இலங்கைமுழுவதும் சமஅந்தஸ்து வழங்கவேண்டுமென்று மக்கள் அரசாங்கத்தை வேண்டுகிறேன். சிலமக்களின் ஆதரவும் இதற்குநிச்சயம் உண்டென நம்புகிறேன். பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தத்தினால் தமிழர், சிங்களவர் ஐக்கியம் நிலைக்குமென்று சொல்லமுடியாது. ஒருஐக்கியஇலங்கை வேண்டுமானால் சிங்களத்தைப்போல் தமிழுக்கும் நாடுமுழுவதும் உரியஅந்தஸ்து இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் இந்நாட்டில்ஐக்கியம்நிலவும். புத்ததர்மம் தழைத்தோங்கும்."

---

உளமே உலகம்; அதுதானே மோட்சத்தை நரகமாக்கவும், நரகத்தை மோட்சமாக்கவும் வல்லது.

—மில்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தங்கவிருதுபெற்ற தியாகியானதாய்

ஐக்கியஅமெரிக்கதேச பதுவா நகரிலே தன்னுடைய ஒன்பது பிள்ளைகளைத் திருச்சபைத் தொண்டுக்கு அர்ப்பணஞ்செய்த திருமதி. லெயோனில்டே பறற்ரேஉனும் இத்தாலியமாது ஓர் விசேஷதங்கவிருது சன்மானிக்கப் பெற்றிருக்கின்றாள். இவளின் ஆறுபுத்திரிகள் சலேசியன்சபைக் கன்னியாஸ்திரிமாராயும், இரு புத்திரர்கள் சலேசியன்சபைக் குருமாராயும், மூன்றுவதுபுதல்வர் அமலோற்பவமரியநாயகி சபைக் குரவராயும் இருந்துவருகின்றார்கள். அங்கரிலுள்ள அர்ச். ஜோண்பொஸ்கோ கல்லூரியில் நிகழ்ந்த வைபவமொன்றின்போது சலேசியன்சபை அதிசிரேஷ்டரான வண. பெனற்ரோ சிகியொட்டிசுவாமியாரால் இந்த மகிமைவிருது இவர்களின்தாய்க்குச் சன்மானிக்கப்படலாயிற்று.

### கருதினலாண்டவரை அழையுங்கள்

அமெரிக்கசெனற்சபை,சனப்பிரதிநிதிகள்சபை இரண்டினதும் இணைக்கூட்டமொன்றில் பேசக் ஹங்கேரியதேச கருதினல் யோசெவ் மின்ட்சென்றிஆண்டவர் அழைக்கப்படவேண்டுமென்று அங்கு கொனெக்ரிக்கட்டின் குடியரசுக்கட்சி அங்கத்தவரான திரு. தோமாஸ் ஜே. டொட் அவர்கள் அரசாங்கத்துக்கு ஓர்வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். இவர் "சோவியத் கொடுங்கோன்மையை எதிர்த்து நிற்கும் ஹங்கேரிய எழுச்சியின் உயிருள்ளசின்னம்"என்று கருதினல் மின்ட்சென்றிஆண்டவரைப் பாராட்டி, உணர்ச்சிகேடான இக்காலத்திலே அமெரிக்கமக்கள் அவசியம் செவியாரக் கேட்க வேண்டியிருக்கும் ஓர்செய்தியை இந்தக்குருசிரேஷ்டர் அவர்களுக்குக்கொண்டுவரவேண்டும்; அதனுல் கருதினல்மின்ட்சென்றி ஆண்டவரை இங்கேஅழைக்கும் படியாகச் சனப்பிரதிநிதிகள் சபையிலே ஓர்பிரேரணை கொண்டுவரப்படவேண்டுமெனக் கோருகின்ருர்; புடாபெஸ்ற்நகரிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தில் அடைக்கலம் புகுந்திருக்கின்ற அவர் எந்த வேளையும் அபாயத்தில் இருந்து வருகிறரெனக்கூறியிருக்கின்ருர்.

### சிறியபுஷ்பத்தின் தந்தையார்

குழந்தைசேசுவின் அர்ச். தெரேசம்மாளது தந்தையாரான லூயிஸ் மாட்டீனுக்கு முத்திப் பேறுபெற்றபட்டம் அருளுவதற்கு வழிபண்ணக்கூடியதான ஆரம்பவிசாரணை பிரான்சிலே பெயோநகர் அன்ட்றே ஜாக்குவெமீன் மேற்றிராணியாரால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவகுடும்பவாழ்க்கைக்கு மாதிரிகையாய் விளங்கியிருந்தவர்களான சீர்த்திவாய்ந்த பிரான்சியஅர்ச்சியசிட்டவளின் பெற்றோரின் முத்திப்பேறுபெற்றபட்டத்திற்கான ஆரம்ப விசாரணைகளைத் தொடக்க வேண்டுமென்று உலகமுழுவதிலுமிருந்தே செய்யப்பெற்ற வேண்டுகோள்களின்பேரில் திருச்சடங்காசார திருச்சங்கத்தின்அனுமதியின்பேரிலே இந்தவிசாரணை ஆரம்பிக்கப்படலாயிற்று. லூயிஸ் மாட்டீன் 1823-ம்ஆண்டு போர்டோநகரில் பிறந்தார். மிகுந்த பக்தியுள்ள செலியே குவேறின் எனும்மாதை 1858-ம் ஆண்டு விவாகஞ்செய்தார். இவர்களின் ஒன்பதாவதுபிள்ளையும், கடைசிப் பிள்ளையுமான யேசுவின் சிறிய புஷ்பமாகிய அர்ச்.தெரேசம்மாள் 1873-ம் ஆண்டு பிறந்தாள். லூயிஸ்மாட்டீன் 1894-ம்ஆண்டு ஆடிமாதம்29-ந்திகதியும், அவர் மனைவியார் 1877-ம் ஆண்டும் காலஞ்சென்ருர்கள்.

### ரூஷியா மனந்திரும்புகின்றதா ?

"சமயத்தை அழித்தொழிக்கச் செய்துவரும் முயற்சியிலே கம்யூனிஸ்தர்கள் கையாளும் தந்திரம் அவர்களுக்கே அவதந்திரமாய் முடிகின்றது; உலக சமாதானத்துக்குத் திறவுகோலாகக் கருதப்படுகின்ற ரூஷியாவின் மனந்திரும்புதல் முன்னர் எக்காலத்திலும்பார்க்கத் தற்போது அதிகம்சமீபமாக இருக்கிறது"என்றுகருதினல்மார் திருச்சங்கத்தலைவரான கருதினல் திசருன்ஆண்டவர் கூறுகின்ருர். சைபீரியசுரங்கங்களிலே அடிமை வேலைக்கென்று மேற்றிராணிமாரையும், குருமாரையும் பலவந்தஞ் செய்கின்ற கம்யூனிஸ்ததந்திரமானது, அநேகாநேகர் திருச்சபையைப்பற்றி அறிந்துகொள்ள வசதிசெய்திருக்கிறது; இந்தவிதமாகச் சமயத்தைப்பற்றிய அற்பசொற்பஅறிவுள்ளவர்களும், அன்றேல் சமயமேஇல்லாதவர்களுமான எண்ணிறந்தகைதிகள் சிறைவைக்கப்பட்டுள்ள மேற்றிராணிமாரோடும், குருமாரோடும் தொடர்புவைத்துக் கத்தோலிக்க திருச்சபையைப்பற்றி நன்கறிந்து அதில்சேர்வதற்கான ஓர்சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது; மிகவுங்கொடிய மனுத்தன்மையற்றசெயல்கள் ரூஷியாவிலே அதிகரித்துவரக் காணப்பட்டபோதிலும் வெளிநிலைமைகள் திருச்சபைக்குச் சாதகமாகவே காணப்படுகின்றனவென்று கருதினல்ஆண்டவர்கூறுகின்ருர்.

### மிலான் சர்வகலாசாலைஅதிபர்

பிரான்சீஸ்குவின் சபையைச் சேர்ந்தவரும், இத்தாலியிலே மிலான்நகர திருஇருதயநாதர் சர்வகலாசாலையை அடியிட்டவரும், அதன்தலைவரும், உலகில் மகாகீர்த்திவாய்ந்த மனோதத்துவ சாஸ்திர விற்பன்னர்களில் ஒருவருமான 79வயதுடைய வண. அகஸ்ரினே கெமெல்லி சுவாமியார் மனந்திரும்பிய ஒருவராவர். ஓர்காலம்இவர் தீவிரசோஷலிஸ்தராய்—அதாவது, சமுதாய அபேதவாதியாய் இருந்தபோதிலும் எப்போதுமே புகழ்பெற்ற வித்தியாபண்டிதராய் விளங்கியிருந்தார். சமுதாயஅபேதவாதவிஷயமாய் இவர்திருச்சபையுடன் நெடுநாள்வாதாடிக் கொண்டுவந்தார். இந்தவாதாட்டமே இவர் கத்தோலிக்க அபிப்பிராயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வழிதிறந்துவிடலாயிற்று. அதிலிருந்து மனந்திரும்பினர். கத்தோலிக்கராயினர். குருப்பட்டத்துக்குப்படித்துக் குருவாயினர். ஓர்முடவரான இவர் சர்வகலாசாலைஅதிபராய் மாத்திரமல்ல, ஓர்பத்திரிகாசிரியராயும், தலைசிறந்தஎழுத்தாளராயும், பாப்பரசரின் விஞ்ஞானசாஸ்திரகழக ஸ்தாபகராயும் விளங்கிவருகின்ருர். பலநூற்ருண்டுகளுக்கு முந்திய கல்விஸ்தாபனங்கள் சர்வசாதாரணமாயுள்ள ஓர் தேசத்திலே மிலான்நகர திருஇருதயநாதர் சர்வகலாசாலை 36வருடங்களின்முன்னரே ஸ்தாபிக்கப்பட்ட ஓர்இளம் ஸ்தாபனமாய் இருந்தபோதிலும் பலதுறைகளிலும் சிறந்தவிருத்திபெற்றுப் பிரதாபம்பெற்றுத்திகழ்கின்றது.

### மாதாக்களின்மாதா திருசேத்திரம்

சிக்காகோநகருக்குச் சமீபமாக றிவர்சைட் எனுமிடத்திலே பலதேசங்களிலும் அறியப்பெற்றதான மாதாக்களின்மாதா திருசேத்திரம்ஒன்று இருந்துவருகின்றது. இதுஅதிகம்புதிய திருசேத்திரங்களில்ஒன்ருய் இருந்தபோதிலும் கிறீஸ்துநாதரின் தாயாருக்கும், எங்கெங்குமுள்ள தாய்மாருக்குமிடையே கிறீஸ்துவேதத்தில் இருந்துவருகின்ற மகாப்பழமையும், மகா அலங்காரமுமான தொடர்புகளில்ஒன்றை ஞாபகப்படுத்துகின்றது. தேவதாயார் தனதுமாதிரிகைஎன்பதைத் தாய்மார்ஒவ்வொருவருக்கும் ஞாபகப்படுத்துவதும், எப்போதுமே கிடைக்கக்கூடிய அத்திருத்தாயாரின் பாதுகாவலை இரந்துகேட்குமாறு அவர்களைத்தூண்டிவருவதுமே இத்திருசேத்திரத்தின் நோக்கமாகும். தனதுபேறுகாலம்வரும்போது மாத்திரமல்ல, ஆனல், தனதுபிள்ளைகளை வளர்த்து, வழிகாட்டுவதாலே தன்சீவியத்தின் மீதிக்காலத்திலும் மாதாக்களின் திருமாதாவானவர் தனக்கு எவ்வளவுதூரம் உதவியாய் இருக்கமுடியும்என்பதை ஒவ்வொருதாயும் அறிந்திருக்க வேண்டுமென்று இதனை அடியிட்டவரான வண. ஏ. எச். மெனுறிக்சுவாமியார் கூறுகின்ருர். இத்திருசேத்திர பக்தி வணக்கமானது கத்தோலிக்க ஆஸ்பத்திரிகள்மூலமாக அவற்றிலேதொண்டாற்றுகின்ற கன்னியாஸ்திரிமார்களின் ஒத்துழைப்புடன் தற்போது வெகுவாகப் பரந்துள்ளது. ஐக்கிய அமெரிக்க தேசத்தில் அடங்கியுள்ள நாடுகள் ஒவ்வொன்றையும், மற்றும்பதினெரு பிறநாடுகளையும்சேர்ந்த 60,000 தாய்மாருக்குமேல் தற்போது இந்தப்பக்திவணக்கத்தில் சேர்ந்திருக்கின்ருர்கள்.

---

"ஞானரோசாச்செடிகள் இயற்கை ரோசாச்செடிகளைப் போன்றன அன்று. இயற்கை ரோசாச்செடிகளிலே முட்கள் தங்கிவிடுகின்றன. ஆனல், ரோசாமலர்கள் போய்விடுகின்றன. ஞானரோசாச்செடிகளில் முட்கள் போய்விட, ரோசாமலர்கள் தங்கிவிடுகின்றன."

அர்ச். பிரான்சிஸ் சலேசியார்

---

# பாப்பரசரும் குருப்பிரசாதிகளின் தாய்மாரும்

"திருச்சபையின்மகத்தான அப்போஸ்தலத்துவதொண்டிலே தலைசிறந்த— வெளிப்படையாகப் புலப்படத்தக்க ஒத்துழைப்பாளர்கள்" எனப் பரிசுத்தபாப்பரசர் அன்றுகுருமாரின் தாய்மாரைப் புகழ்ந்துபாராட்டி "கத்தோலிக்க மக்கள்சகலரும் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாய் இருந்துவரவேண்டு"மெனக் கூறலாயினர். ஐக்கியஅமெரிக்கதேச 35மேற்றிராசனங்களைச்சேர்ந்த 51புதிய குருமாருக்கு அளித்தபேட்டியிலே பரிசுத்தபிதா இவ்விதம்கூறலாயினர். அவர்கள் தங்கள்பெற்ரோரும், நண்பர்களுமாகச் சுமார் 200பேர்சமேதராய்ச் சென்றபோது இவர்களெல்லாம் பாப்பரசருக்கு அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டார்கள்.

அத்தருணம்அவர் அங்கு பிரசன்னமாயிருந்த தாய்மாரின் பக்கமாகத்திரும்பி அவர்களையும், குருத்துவபதவிக்குத் தங்கள்புதல்வர்களை அர்ப்பணஞ்செய்தவர்களாய் அகிலமுழுவதிலுமுள்ள மற்றும்தாய்மார் எல்லோரையும் வாழ்த்திநின்ருர். திருச்சபையின் சேவைக்கென்று தங்கள்புத்திரர்களை அர்ப்பணஞ்செய்வதிலே அவர்கள்செய்துள்ள உதாரகுணமும், பெருந்தன்மையும்வாய்ந்த மகத்தான அருந்தியாகத்தைப் புகழ்ந்துகொண்டாடினர்.

"உங்கள்தாய்மார் உங்களைத் திருச்சபைக்குக்கையளித்திருக்கின்றனர்; ஆனல், திருச்சபை ஒருபோதுமே உங்களைத்திரும்ப அவர்களுக்குக் கையளிக்கமாட்டாது; இப்போது நீங்கள் பரிசுத்தமாதாவாகிய திருச்சபைக்கே சொந்தமானவர்கள்" என்று புதியகுரவர்களைநோக்கி அவர்பகரலாயினர். 'உங்கள் தியாகம் எத்தகையநட்டத்தையும் உங்களுக்கு விளைக்கமாட்டாது; ஆனல், நித்தியஆதாயபாகங்களைக் கைம்மாருக உங்களுக்குக் கொடுக்கக்கூடிய ஓர்பெறுபேருகும்"என்பதைப் புதிதாகக் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ற இளைஞர்களின் பெற்ருருக்கு அவர்ஞாபகம்மூட்டினர். தமது தியாகத்தினல் சகலமனிதருமே நன்மையடைய வேண்டுமென்று தம்முடைய திருக்குமாரனை— நித்தியஉந்நதகுருவைக் கையளித்த பரிசுத்ததேவதாயாருக்கு அவர்களைப் பரிசுத்தபிதா ஒப்பிட்டுப்பேசினர். "திருச்சபையாலே மகிமைப்படுத்தப்பெற்ற" அர்ச். மொனிக்கம்மாள், மார்கெறிற்ரே பொஸ்கோ போலும் உத்தமதாய்மார்களின் நன்மாதிரிகையை அவர்கள் பின்பற்றியிருப்பதாகக் கூறினர்.

அர்ச். மொனிக்கம்மாள் கீர்த்தி பெற்ற அர்ச். அகுஸ்தீனரின் தாயார். அவர் கி. பி. 393-ம் ஆண்டு ஓர்குருவாகவும், மூன்று வருடங்களின்பின் ஓர்மேற்றிராணியாராகவும் அபிஷேகஞ் செய்யப்பெற்ருர். மார்கெறிற்ரு பொஸ்கோ அர்ச். ஜோண்பொஸ்கோவின்தாயார். ஓர்இத்தாலிய கிராமப்பையனுகிய அவர் 1841-ம் ஆண்டு ஓர்குருவாயினர். பாலியர்களைக் கல்விபயிற்றிச் சன்மார்க்கமுள்ள பிள்ளைகளாக்குவதிலே நெடுங்காலம் தொண்டாற்றிப் பிரஸ்தாபம்பெற்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாசி மாதம்

பரிசுத்த வியாகுலமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்

**பொதுக்கருத்து:** தேசஅதிகாரிகள் பொதுநலப்பிரச்சினைகளில் தங்களுக்குள்ளே உண்மையோடும், நீதியோடும் நடந்துகொள்வதற்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதகக்கருத்து:** இந்திய சர்வகலாசாலை மாணவர்களுக்காக மன்ருடிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்
1957-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 12-ந் திகதி

## பரிசுத்த வியாகுலமாதா

புரட்டாசிமாதம் 8-ந்திகதி பரிசுத்த கன்னிகாமாதாவின் ஜனன திருநாளும், 12-ந்திகதி மரியாய்என்னும் திருநாமத்திருநாளும், 15-ந்திகதி வியாகுலமாதாவின் ஏழுவியாகுலத்திருநாளும் திருச்சபையிலே கொண்டாடப்படுகின்றன. இந்தத்திருநாளில் மாத்திரமல்ல, தபசுகாலத்தின் ஆறும்வெள்ளியிலும், புரட்டாசிமாதத்தின் ஒவ்வொருதினத்திலும் மாதாவின்ஏழுவியாகுலங்களையும் நினைவுகூர்ந்து வியாகுலமாதாவை நாம்பக்திசெய்துவர வேண்டுமென்பது திருச்சபையின் கருத்தும், விருப்புமாகும். அதனல், இப்பக்தியை நன்குஅறியவும், அநுட்டிக்கவும் முயலுவோமாக.

தமதுசீவியகாலத்திலே பரிசுத்தகன்னித்தாயார் எத்தனையோசமயங்களிலே, எத்தனையோமுகாந்தரங்களிலே எத்தனையோவியாகுலங்களை அநுபவிக்க நேர்ந்ததுவாஸ்தவமே. எனினும்,-

1. சிமெயோன்சொல்லிய தீர்க்கதரிசனத்தைக் கேட்டபோதும்,
2. தேவகுழந்தையின் சேமத்தின்பொருட்டு இரவிரவாக எஜிப்துநாட்டிற்குத் தீவிரித்துச்சென்றபோதும்,
3. பன்னிருபராயக்குமாரனை மூன்றுநாட்காணது தேடித்திரிந்தபோதும்,
4. சிலுவைசுமந்து செல்லும் திருக்குமாரனை மினவியபோதும்,
5. அவர்சிலுவையில் நிஷ்டூரமாய் அறையுண்டு மரித்தபோதும்,
6. அவரதுதிருமேனி சிலுவையால்இறக்கப்பட்டுத் தமது திருமடியில் வளர்த்தப்பட்டபோதும்,
7. அஃதுகல்லறையில் அடக்கப்பட்டுக் கண்ணுக்குமறைந்தபோதும்.

அப்பரமதாயார் அடைந்தஏழுவியாகுல்ங்களே தெரிவுசெய்து தியானிக்கப்பட்டு வருகின்றன. ஏழுவியாகுலங்களும் ஏழுவாட்கள்போல மாதாவின்மாசற்ற இருதயத்தை ஊடுருவிவாதிக்கலாயின. தமதுதேவனும், இரட்சகரும், ஏககுமாரனுமானவர்—எக்காலத்தும் காணரிய இருதயவசீகர மானிடலட்சணங்களும், தைவிகலட்சணங்களும் ஒருங்கே அமைந்துவிளங்கித் தமதுகண்ணுக்கு ஒளியும், உயிருக்கு உயிருமானவர் தமது கண்முன்பாகவே சிந்தாகுலப்படவும், நிந்தைஅவமானங்களாற் பூரிக்கப்படவும், அடிமைபோலக் கற்றூணிற் கட்டுண்டு தசைகிழிய, உதிரம் பொழியக் குரூரமாய்அடிக்கப்படவும், கூரியமுண்முடி சிரசில் அழுத்தப்படவும், பாரச்சிலுவை சுமத்தி நடத்தப்படவும், பெரும் இருப்பாணிகளால் அஸ்தபாதங்கள் சிலுவையிலே அறையப்படவும், மூன்றுமணித்தியாலமாக ஆற்றெணு அகோரவாதைப்பட்டு மானிடராலும், தேவபிதாவாலுமே கைவிடப்பட்டு, கடினஅவஸ்தைப்பட்டு உயிர்விடவும்கண்டு மனோவாக்குக்கெட்டாத வியாகுலப்பட்டுத் தமதுவியாகுலங்களைத் தமதுதிவ்வியமைந்தனின் பாடுகளுடன் அனுபவித்து எமதுநித்தியஇரட்சணியத்துக்காக உடன்வருந்திய தேவதாயாரும், எங்கள்நேசதாயாருமாகிய வியாகுலத்தாயாருடனே நாம்அநுதாபியாதிருக்கலாமா? அர்ச்சியசிட்டர்கள்சிலர் சொல்வதுபோல் சிலுவையடியிலே இரத்தக்கண்ணீர்விட்டழுத தாயாருடனே நாமும் துக்கக்கண்ணீர்விட்டு அழாதிருக்கலாமா? வியாகுலமாதாவின் வியாகுலப்பக்தியை அநுட்டியாதிருக்கலாமா?

சுத்தவாளரான ஹென்றி சூசோவுக்கு வியாகுலமாதா வெளிப்படுத்தியபடி, சிலுவையடியிலேநின்று அவஅநுபவித்த சிந்தாகுலத்துக்கும், மனிதஇருதயம்எதுவும் அநுபவித்த சருவதுயரத்துக்கு மிடையிலுள்ள வித்தியாசமானது, பெரியதோர் சமுத்திரத்துக்கும், ஒரேயொரு நீர்த்துளிக்குமுள்ள வித்தியாசத்துக்குச் சமானமாகும். தாயார்தாமே அர்ச். விறிஜித்தம்மாளுக்கு அருளிச்செய்தபிரகாரம், அத்தாயார் வியாகுலங்களால்கொண்ட இருதயவேதனையை மனிதர்பரிச்சேதம் கிரகித்துக்கொள்ள முடியாது. ஞானநூலாசிரியர் வலியுறுத்திச் சொல்லும்வண்ணம், சகலவேதசாட்சிகளுக்கும் நேர்ந்த சகலவேதனைகளும் ஒன்றுகூடினும் மாதாவின்ஆத்துமா அனுபவித்த வியாகுலவேதனைக்கு இணையாகமாட்டா. இத்தகைய இருதயவேதனையைத் திருக்குமாரன்மரணித்தபின் அவ உயிர்வாழ்ந்திருந்த பதினைந்து வருடகாலமும் அவருடையகடினபாடுகளையும், மரணத்தையும் தியானித்துத்தியானித்து அநுபவித்தருளினு. ஐந்துகாயவரம் பெற்ற மகாத்துமாக்களைப்போல வெள்ளிக்கிழமைதோறும் திருக்குமாரனின்பாடுகளைத் திருமாதாவும் அநுபவித்ததாக ஆசிர்தமரியம்மாளுக்கு அருளப்பட்ட வெளிப்படுத்தல்மூலமாய்த் தெரியவரலாயிற்று. விசேஷ தேவஅருளாற் பாதுகாக்கப்படாதிருப்பின் மாதாவின்உயிர் வியாகுலமேலீட்டால் உடலைவிட்டுப்பிரிந்திருக்கும்.

இத்தகையகாரணங்களினுல் வேதசாட்சிகளின் இராக்கினியாகப் பாராட்டப்படும் வியாகுலமாதா தமதுவியாகுலங்களை நாம் நினைந்து தம்மோடு அநுதாபப்படவேண்டுமென்று ஆசிக்கின்றூ. சிலுவையடியிலே தாங்கரியவியாகுல அம்பாயப்பட்டு நம்மைத் தமதுஞானமக்களாகப் பெற்றெடுத்த நமது ஈடேற்றத்திற்நிமித்தம் வியாகுலவாளால் ஊடுருவப்பட்ட நமது வியாகுலத்தாயார்பக்தி நமக்குமகத்தான நலன்களை அளிப்பதாயிருக்க, அது அத்திருத்தாயாருக்கும், அவருடைய திவ்வியகுமாரனுக்கும் மிகுதியும்உகப்பானதாயிருக்க, திருச்சபையானது இப்பக்திஅநுசரணைக்காக இருதிருநாட்களையும், ஒருமுழுமாசத்தையும்ஏற்படுத்தியிருக்க, அதன் உத்தமமக்களாகிய புண்ணியாத்துமாக்களும், அர்ச்சியசிட்டர்களும் யுகாயுகமாய் இப்பக்தியை அநுட்டித்துவந்திருக்க, நாமும்அதனை மேலாகமதித்து அநுட்டித்துவருவது பெரும்நன்மையாகுமன்றூ.

---

<u>புத்தக மதிப்புரை</u>

## ஈழமுந் தமிழும்

தொகுப்பாசிரியர்:
வித்துவான் F. X. C. நடராசா
பிரசுரம்: கலைமகள் வெளியீடு

தமிழ்வளர்ச்சிக்கு ஈழநாடு பலதுறைகளிலும் அன்றுதொட்டு இன்றுவரையும் உழைத்துவருகின்றது. பல்வேறு கலைகளை விளக்கும் அரிய நூல்களை ஈழத்து அறிஞர்கள் ஆக்கியுள்ளார்கள். காலத்துக்குக்காலம் ஆக்கிய அந்நூல்கள் போற்றுவாரின்மையால் இன்று அவற்றிற்பல மறைந்துவிட்டன. அதுகாரணமாக ஈழநாட்டில் வெளிவந்த நூல்களின் பட்டியலை இவ்வாசிரியர் இந்நூலில் அரிதுமுயன்று திரட்டித் தந்துள்ளார். ஆசிரியர் தாம் எழுதப்புகும் ஈழம்வளர்த்த தமிழ்என்னும் ஆராய்வுநூலுக்கு உறுதுணையாக அமைந்த இப்பட்டியல் எம்மனைவர்க்கும் அரியபல விஷயங்களை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. செய்யுள்நூல்கள், வசனநூல்கள், இசைநூல்கள், சோதிடநூல்கள், தருக்கநூல்கள், இலக்கணநூல்கள், கணிதநூல்கள், மொழிநூல்கள் என்னும் பல்வேறு நூல்களின் பெயர்களையும், அவற்றை ஆக்கித்தந்த ஆசிரியர்கள் பெயரையும் இப்பட்டியல் தெரிவித்துநிற்கிறது. இன்னும் உரையாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், பத்திரிகைஆசிரியர்கள் ஆகியோரின் நாமாவலியையும் அடக்கியுள்ளது. வித்துவான் அவர்களின் தமிழ்மொழிப்பற்றுக்கும், ஆராய்ச்சித்திறமைக்கும் இப்பட்டியலே தக்கசான்று பகருமென்பதற்கு எட்டுணையும் ஐயமின்று. நமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

---

## தெரியுமா? விடைகள்.

1. ஸ்பெயின்
2. வில்லியம் ஷேக்ஸ்பியர்
3. மோகார்ட்
4. யூரேனியம்
5. 70, 75 வரையில்
6. வௌவால்
7. யூகலிபுடஸ்
8. சிறு மூளையை
9. குடிக்காவிடில் முட்டைகள் வளரமாட்டா
10. பேதுருத்தாலகாலமலை; 8,292 அடி

---

❋ 1956-ம் ஆண்டிலே வத்திக்கான் எத்தனை உலகமகாநாடுகளில் பங்குபற்றியிருக்கிறது?

56 உலகமகாநாடுகளில் பங்குபற்றியிருக்கிறது.

## நானுசங்கதிகள்

● கி. பி. 2,000 வருடத்திற்குமேல் சந்திரமண்டலத்தில் ஓர்புதுநாகரீகம் உருவாகுமென்றும், அப்போது சந்திரமண்டலத்தில் மனிதர்களின் நிரந்தரமான குடியேற்றதலமே உண்டாகமுடியுமென்றும், ஆனுல், மனிதருக்குத் தேவைப்படும் சகல பொருட்களையும் பூமியிலிருந்தே கொண்டுசெல்லவேண்டியிருக்குமென்றும பிலடெல்பியாநகரைச்சேர்ந்த திரு. ஐ. எம். வெலிட் என்ற நிபுணர் கூறுகின்ருர்.

● வத்திக்கான் நூல்நிலையத்தினதும், புராதன சாசனசாலையினதும் அதிபரான கருதினல் மெர்காற்றிஆண்டவர் தமது 91-வது பிறந்தபெருநாளைக் கண்டுகளிக்க இன்னுஞ்சில மாதங்கள் மாத்திரமே இருக்கும்போது இருவாரங்களின்முன் காலஞ்செல்லலாயினர். இவரது மரணத்தாலே கருதினல்மார் திருச்சங்கத்திலுள்ள கருதினல்மாரின் தொகை 58 போராகக் குறைந்துபோயிருக்கிறது.

● தென்னமெரிக்காவிலே ஆர்ஜென்றினுவின் முன்னைநாள் ஜனதிபதியும், தற்போது வெனெசுலாநாட்டிற்போய் அடைக்கலம் புகுந்திருப்பவருமான ஜுவான் பெறன் என்பவர் தேசாந்திரியாய் இருந்துகொண்டும் ஆர்ஜென்றினுவிலே தனது ஆதாவாளர்களுக்கு வேலைநிறுத்தஞ் செய்யவும், சதிவேலைகள் நடத்தவும் கட்டளை கொடுத்துக்கொண்டே யிருக்கிருர்.

● முதலாவது ஆகாயவிமானத்தைக் கட்டிப் பறந்தவர்களான றைற் சகோதரர்கள் தங்கள் முதலாவது விமானத்தில் 40 யார் தூரத்தைப் பறந்துசெல்லப் 12 நிமிஷங்கள் பிடித்தன. ஆனுல், இன்றைய விமானம் ஒன்று அதேநேரத்தில் ஐந்தரைமைல் பறக்கக்கூடியதா யிருக்கிறது.

● சோவியற்ருஷியா தனது முழுவருமானத்திலும் ஏறக்குறைய நூற்றுக்குப் 16 விகிதத்தை யுத்த உபகாரணங்களுக்கென்று செலவிடுகிறது. ஆனல், ஐக்கிய அமெரிக்கதேசம் தனது முழுவருமானத்திலும் நூற்றுக்குப் 10 விகிதத்தைமாத்திரமே யுத்த உபகாரணங்களுக்கென்று செலவிடுகின்றது.

● வோர்செஸ்றர்நகரிலுள்ள சென் வின்சென்ற் ஆஸ்பத்திரிக்கு இரத்தம் அவசியம் தேவைப்படுகிறதென்று மனுச்செய்து கொள்ளப்பட்டபோது 46 இளங் கத்தோலிக்க குருமார் விரைந்துசென்று தமது சரீரத்திலிருந்து இரத்ததானம் செய்துவிட்டுத் திரும்பினுர்கள்.

● சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த விசேஷ வைத்தியநிபுணரான டக்றர் போல் நெய்ஹன்ஸ் அவர்கள் சென்ற 8-ந் திகதியன்று பரிசுத்தபாப்பரசரைப் பரிசோதனைசெய்து அவரது சுகாதாரநிலை திருப்திகரமாயிருப்பதாக அறிந்துகொண்டாரென்றும், அன்றிரவு பரிசுத்தபிதா 72 நாடுகளைச்சேர்ந்த 9,000 பல்வைத்தியர்களுக்குப் பேட்டியளித்துப் பிரான்சியபாஷையில் அவர்களுடன் உற்சாகமாகப் பேசினுரென்றும் தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது.

● அமெரிக்க அணுச்சக்திக்கம்மிஷன் வருகிறசனிக்கிழமை நெவாடாவில் ஓர் அணுக்குண்டுப்பரீட்சை நடத்துமென்றும், பூமியில் உள்ளமைப்பைப் பரிசீலனைசெய்யப் பூகர்ப்ப சாஸ்திரிகளுக்கு உதவிசெய்வதே இந்தப் பரீட்சையின் நோக்கமென்றும் கனடாதேச ரொறன்ரோநகரிலிருந்து சென்ற 7-ந் திகதி செய்திகிடைத்திருக்கிறது.

* * *

❋ ஒருறுத்தல் தேன்சேர்க்க ஒரு தேனீ எத்தனைமைல்தூரம் பறந்து செல்லவேண்டியிருக்கிறது?

43,776 மைல்தூரம் பறந்துசெல்லவேண்டியிருக்கிறது. ஒருறுத்தல்தேன் என்ருல், ஏறக்குறைய 29,184 துளிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் மூன்று பிரியதத்த மந்திரம்?

"........ உமது பாவங்களுக்குப் பரிகாரமாக மூன்று பிரியதத்த மந்திரம் சொல்லுவீராக"

பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டதும் பாவசங்கீர்த்தனஞ் செய்தவொருவர் அருகாமையிலிருந்த ஓர் ஆசனத்திற்குச் சென்றார். "நான் பாவசங்கீர்த்தனஞ் செய்யும்போதெல்லாம் ஏறக்குறைய ஒவ்வொருமுறையும் செய்தபாவங்களுக்குப்பரிகாரமாக மூன்றேமூன்று பிரிய தத்தமந்திரம் தானே சொல்லும்படி குருவானவர் கேட்கின்றார் பதினைந்து பிரியதத்த மந்திரமாவது சொல்லும்படி அவர் கேட்டாலென்ன? இல்லை, இருபத்தைந்துதரம்தானும்சொல்லும்படி உத்தரவிட்டாலும் அவ்வாறு செய்யமாட்டேனா?" என்று அவர்யோசிக்கலாயினர்.

உமக்கும் இந்தவிதமான யோசனை எப்போதாவது வந்ததுண்டா? ஏன் மூன்றுபிரியதத்த மந்திரம்மாத்திரம் சொல்லவேண்டும்?

பரிசுத்ததிருச்சபையானது தனது மக்களுக்கெல்லாம் ஞானமும், அறிவும் நிறைந்த ஓர்தாயாக விளங்குகிறது. ஏறத்தாழ ஈராயிரம்வருடங்களாக எத்தருணத்திலாவது எமக்கு ஒரு உண்மையைப் படிப்பிக்கத் தகுந்தசந்தர்ப்பம்வாய்த்தால் இந்தத்தாய் அச்சந்தர்ப்பத்தைத் கைநெகிழவிடாது பயன்படுத்திக்கொள்ளுகின்றாள். சித்திரங்களினாலும் படிப்பிக்கின்றாள். சிற்பவேலைகளினாலும் படிப்பிக்கின்றாள். சங்கீதத்தினாலும், திருச்சடங்குமுறைகளினாலும், அடையாளங்களினாலும் படிப்பிக்கின்றாள். இவைகள் மட்டுமல்ல, எண்களினாலும் படிப்பிக்கிறதைக் காண்கிறோம.

"ஒன்று" என்னும்போது தேவனின் ஒருமைப்பாட்டுக்கு அதுஓர் அறிகுறியாயிருக்கிறது. "இரண்டு" என்பது எங்கள்இரட்சகரின் தெய்வீகமும், மனுஷீகமும்சேர்ந்த இருசுபாவங்களைக் குறிக்கின்றது. "மூன்று" என்பது பரமதிரித்துவத்தின் மூன்று ஆட்களாகிய பிதா, சுதன், தூயஆவியை நினைப்பூட்டுகின்றது.

நாம் மூன்றுபிரியதத்த மந்திரம் சொல்லும்போது பரிசுத்தகன்னிமரியாயை அந்தரங்கவழிபா[illegible] வேண்டிக்கொள்ளுகிறோம். ஆனால், எதற்காக நாம் மூன்று பிரிய தத்தம் சொல்லவேண்டும்? ஏனென்றால், அவ்வாறு சொல்லும்படி பரிசுத்ததேவதாயார்தானே கற்பித்திருக்கின்றூ.

1270-ம்ஆண்டு தேவதாயார் அர்ச். மெத்தில்த் அம்மாளுக்குக் காணப்பட்டுச் சொன்னதாவது: "தினந்தோறும் விசேஷமாக மூன்றுபிரியதத்த மந்திரம் சொல்லிவரும்படி நான்கேட்டுக்கொள்ளுகிறேன். முதலாவது பிரியதத்தம்: என்னைச் சகலசிருட்டிகளிலும்பார்க்க மேன்மைப்படுத்திய பிதாவாகிய சர்வேசுரனுடைய வல்லபத்தை மகிமைப் படுத்துவதற்காகச் சொல்லுவாயாக. இந்தப்பிரியதத்த மந்திரம் சொல்லும்போது, எந்தநாளிலும்— விசேஷமாக மரணத்தருவாயிலும் உன்னைக் காப்பாற்றியருள அவரது வல்லமையைப் பிரயோகிக்கும்படி என்னிடம் கேட்பாயாக.

இரண்டாவது பிரியதத்தம்: தமது நிகரற்ற ஞானத்தை என்மீது வாரியிறைத்த சுதனுகியசர்வேசுரனுடைய ஞானத்தின் மகிமைக்காகச் சொல்லுவாயாக. அதைச் சொல்லும்போது உனது மரணத்தறுவாயிலே எவ்வகையான புத்திக்குருட்டாட்டத்திலும், தவறிலும்நின்று உன்னைக்காப்பாற்றி உனது மன அங்கலாய்ப்பைப் போக்கியருள வேண்டுமென்று என்னைக்கேட்பாயாக.

மூன்றுவதுபிரியதத்தம்: எனதுஆத்துமத்தைத் தமதுஅன்பாலும், இரக்க உருக்கத்தாலும் நிரப்பிய பரமதிரித்துவத்தின் மூன்றும்ஆளாகிய தூயஆவியானவருடைய இரக்கத்தின் மகிமைக்காகச் சொல்லுவாயாக. இந்தப்பிரியதத்த மந்திரத்தின்மூலம் மரணநேரத்தின் கசப்பைமாற்றித் தெய்வீகஇனிமையையும், சந்தோஷத்தையும் அத்தருணத்தில் அனுக்கிரகிக்க வேண்டும் என்று என்னைமன்றுடுவாயாக."

இதுதான் "மூன்று பிரியதத்த மந்திரப்பக்தி" என்று அறிகின்றோம். இந்தப்பக்திதினந்தோறும்காலையிலும், மாலையிலும் மூன்றுபிரியதத்த மந்திரஞ்சொல்லி, அத்துடன் "ஓ, மரியாயே, என்நல்ல தாயாரே, இன்றுபகல் (அல்லது இரவு) முழுவதும் என்னைச் சாவானபாவத்தில்நின்று தற்காத்துக் கொள்ளும்" என்[illegible] சொல்வதில் அடங்கும். [illegible]செபத்தைத் தினந்தோறும் சொல்லிவந்தவர்கள் தேவதாயாரிடமிருந்து அடைந்துகொண்ட ஆத்தும, சரீரசகாயங்களைப்பற்றி எழுதிப்பரப்புவதென்றால் எத்தனை புத்தகங்கள் கொள்ளுமென்று நிர்ணயிப்பது சாத்தியமல்ல. அதிகமான புதுமைகள், சத்தியவேதத்தை மறுதலித்திருந்தவர்கள் அற்புதமாக மனந்திரும்பியதும், பரிசுத்தகற்புக்கெதிரான பாவத்தைக் கட்டிக்கொண்டவர்கள் அப்பாவங்களில்நின்றும் தங்களை விடுவித்துக்கொண்டதுமாகும்.

இந்தப்பக்தியின் உண்மையான வல்லபத்தை மரணத் தறுவாயில்தான் காணமுடியும். பரிசுத்த தேவதாயார் அர்ச். ஜெர்த்ருத் அம்மாளுக்கு ஓர் காட்சியில் தம்மைக் காண்பித்து, "மூன்றுபிரியதத்த மந்திரப்பக்தியைச் சிரத்தையுடன் அனுசரித்துவரும் ஒரு ஆத்துமத்தின் மரணத்தறுவாயிலே நான் அந்தஆத்துமத்திற்கு விபரிக்க முடியாத அலங்காரபிரபையுடன் என்னைக் காண்பித்து, அந்தஆத்துமத்தை மோட்சதேற்றரவால் நிரப்பியருளுவேன்" என்று வாக்குப்பண்ணியிருக்கின்றூ.

மோட்சஇராக்கினிபோரல் சொல்லப்படும் எல்லாச்செபங்களிலும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததும், முதல் இடம்வகிப்பதும் பிரியதத்த மந்திரமே என்று அர்ச். அல்போன்ஸ் படிப்பித்திருக்கின்றார். அவ்வாறு அவர்சொல்வதற்குத் தகுந்த நியாயமுண்டு. சம்மனசானவர் இந்த மந்திரத்தைச் சொன்னதோடு எங்கள் இரட்சணியம் ஆரம்பமா[illegible]யது. நித்தியத்திற்கும் திவ்விய பூசைப[illegible]நிறைவேறுவது நின்றுவிட்டபின்ன[illegible]மோட்சஇராச்சியம் முழுவதும் தே[illegible]தாயாருடைய செபமாகிய பிரியதத்த மந்திரத்தின் நாதத்தால் ஒலித்துக்கொண்டிருப்பது சம்பவிக்கக்கூடிய ஒருகாரியமாயிருக்கும் என்று நம்பலாம்.

ஆகையால், இச் சிறியசெபத்தின் மேல் மிகுந்தநம்பிக்கையும், எல்லையற்ற உறுதியுங்கொள்வது விவேகமற்ற செய்கையாகுமா? இல்லை. அவில்லா நகர அர்ச். தெரேசம்மாள் "சீவியகாலம்முழுவதும் படும்வேதனையால் ஏற்படும் மகிமையிலும்பார்க்க, ஒரு பிரியதத்தத்தால் உண்டாகும் மகிமை மிகவும் விசேஷித்தது" என்று எழுதியிருக்கின்றாள்.

— V. M. Joseph —

---

ஓர் சுண்டெலியின் இருதயம் நிமிஷம்ஒன்றுக்கு 300 முறை அடிப்பதாகவும், ஓர்வளர்ந்த பாரமான யானையின் இருதயம் நிமிஷம் ஒன்றுக்கு 40 முறைமாத்திரமே அடிப்பதாகவும் விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சியிலே கண்டறிந்து கூறுகின்றார்கள்.

# அர்ச். சூசையப்பரும் தொழிலாளரும்

சென்ற 4-9-57 புதன்கிழமை பிற்பகல் போட்கம்மிஷன் பகுதியைச் சேர்ந்த வோட் ஹவுஸ் என்னும் தொழிற்சாலையில் அவ்விடத்தின் தொழிலாளரால் அர்ச். சூசையப்பரின் சுரூபஸ்தாபகம் பெரிதும் ஆடம்பரமாக நடைபெறலாயிற்று. இந்த வைபவத்திற்கு மாஸ்றர் அற்றெண்டன் திரு. ஜே. எச். ஜென்சன் துரையவர்கள் தலைமைவகிக்க, மற்றும் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் சமுகமளித்திருந்தார்கள். துரையவர்கள் தலைமைதாங்கியதும் அவரால் மிகுந்த பூச்சியத்துடன் திருச்சுரூபத்திற்குப் பூமாலைசூட்டப்படலாயிற்று. பின்னர் மாஸ்றர் அற்றெண்டன் அவர்கள் சபையோரால் மாலைசூட்டப்பட்டார். தமிழிலே அர்ச். சூசையப்பருக்கு ஓர்செபம் வாசிக்கப்பட்டதும் "அர்ச். சூசையப்பரும், தொழிலாளரும்" என்ற பொருள் பற்றித் தமிழிலும், சிங்களத்திலும் சில பெரியார்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. பின்னர் எம். ஏ. துரைஅவர்கள் அர்ச். சூசையப்பரின் திருச்சுரூபத்தைத் தமது காத்தால் ஏந்தத் தாம் தகைமையற்றவரென்றும், சகலதொழிலாளரும் சஞ்சூசைமாமுனிவரின் முன்மாதிரிகையைப் பின்பற்றிவரவேண்டுமென்றும், தினமும் வேலைதொடங்குமுன் செபஞ்செய்து அவருடைய உதவியைத்தேடுவது உசிதமென்றும் இனியமுறையில் சுருங்கக்கூறினர். செபங்கள் முறையே தமிழ், சிங்களம்எனும் இருபாஷைகளிலும் சொல்லப்பட, வீணைவாத்தியங்களின் உதவியோடு கீதங்களும் பாடப்பட்டன. அவ்வேளை தொழிலாளர்கள் அனைவரும்பக்திவணக்கத்துடன் திருச்சுரூபத்தைப் புடைசூழ்ந்துநிற்க, எம். ஏ. துரைஅவர்கள் திருவிளக்கை ஏற்றிவைத்தார்.

இந்தச்சுரூபஸ்தாபகம் ஏன்ஸ்தாபிக்கப்பட்டது? அதனை முத்திசெய்[illegible]வதற்கல்ல. அர்ச். சூசையப்பரின் திருச்சுரூபத்தை முத்திசெய்[illegible]து வெளி அடையாளமாகும். ஆனால், அதன் ஞானக்கருத்து, அவருடைய உதவி ஒத்தாசையைத் தேடுவதும், அவரைக் கண்டுபாவிப்பதுமேயாகும். நாம் எத்தனையோ இன்னல்களால் பீடிக்கப்பட்டிருக்கும் ஏழைத்தொழிலாளர்கள். ஆனால், ஓர்ஏழையாகவே சீவித்த அர்ச். சூசையப்பர் நமது ஆறுதலாகவும், கத்தோலிக்கவாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் எம்மத்தியில் பிரகாசிப்பது நமக்கு எவ்வளவோ பெரிய ஆனந்தம். அர்ச். சூசையப்பர் ஓர் தச்சுத்தொழிலாளியாய் இருந்தபோதிலும் அவர் உலகஇரட்சகரைத் தமது காத்தில் ஏந்தி வளர்க்கவும், திருச்சபையின் பாதுகாவலராகத் துலங்கவுஞ் செய்தவை அவரில்விளங்கிய தேவசிநேகமும், தாழ்ச்சியும், பிறர்சிநேகமுமே. அதேபோல் திருச்சபை நாலாபக்கங்களிலும் நானுவிதமாகத் துன்பப்படும் இக்காலத்திலே கத்தோலிக்கதொழிலாளராகிய நாம் தேவசிநேகம், தாழ்ச்சி, பிறர்சிநேகமுடையவர்களாய் நமது தொழிற்சாலைகளிலே— விசேஷமாய்ப் பிறசமயத்தவர்கள் மத்தியிலே சீவிப்போமானால் நாமும் அதேஉலகஇரட்சகரை நம்முடைய இருதயங்களில் வாசஞ்செய்யப்பண்ணவும், நமது கத்தோலிக்கசேவையினாலே திருச்சபையைப் பாதுகாக்கவும் முன்வரலாம்.

நாம் பிறசமயத்தவர்களுடன் தொழிற்சாலைகளில் உறவாடும்போது வீண்பகிடி பரிகாசம், கற்புக்குவிரோதமான சம்பாஷணைகள், பிறர்சிநேகத்திற்கு விரோதமான குத்துவார்த்தைகள் யாவையும்விலக்கி, நாம உண்மையான கத்தோலிக்கமக்கள் என்பதை நமது முன்மாதிரிகையால்காண்பிப்பது நமது திருச்சபையின் விருத்திக்கு அத்திவாரமென்பதை நாம் மறக்கப்படாது. நாம் செய்யும் பிரயாசையான வேலைகள் யாவையும் திருச்சபையின் நலனுக்காகச் செய்வதானது நமதுதிருச்சபையின் ஞானஆயுதமாகவும், பிறஆத்துமாக்களை அர்ச்சிக்கும் அவுடதமாகவும் இருக்கும்.

ஆதலால் நாம் அர்ச். சூசையப்பரிடம் போவோம். நமக்கு வேண்டிய சகல இகபரநலன்களையும் இரந்துகேட்போம்! உத்தம கத்தோலிக்கசீவியம் நடத்தி, அர்ச். சூசையப்பரைப்போல நடந்து கத்தோலிக்க தொழிலாளராகச் சொலிக்க அவருடைய ஒத்தாசையை இரந்துநிற்போம். சுபம்!

— ஓர் கத்தோலிக்க தொழிலாளன்

---

# வத்திக்கான் தபால் முத்திரைகள்

அநேகமாய் உலகில் அதிகம்விரும்பி வாங்கப்பட்டுவரும் தபால்முத்திரைகள் வத்திக்கான் இராச்சியம் விடுக்கும் தபால்முத்திரைகளே. அத்துணை கருத்தாக அவைகள் நாடி வாங்கப்படுவதன் முக்கியகாரணம், வத்திக்கான் உலகில் மகாசிறிய இராச்சியமாயும், அதனை ஆட்சிசெய்கிறவர் 40 கோடிக்கு மேற்பட்டமக்களின் ஆத்மீக தலைவராயும், இந்தமுத்திரைகள் பொதுவாகச் சரித்திர சம்பந்தமானவைகளாயும் இருப்பதேயாகும். 1929-ம் ஆண்டு மாசிமாதம் 11-ந் திகதியன்று லத்தறன் உடன்படிக்கையாலே ஓர்சுதந்திர இராச்சியமாக அங்கீகரிக்கப்பட்டு ஆறுமாதங்களின்பின்னரே வத்திக்கான் தனது முதலாவதுஇனத் தபால் முத்திரைகளைப் பாவனைக்கு விடுத்தது. இனம் என்று சொல்லும்போது ஒவ்வோர்இனமும் வேறுவேறு விதமான பல முத்திரைகளின் தொகுதியாகும். இந்தமுத்திரைகள் "தற்காலிக" மானவைகளே. பின் இவற்றைத்தொடர்ந்து மற்றும் 56 இனமான தபால்முத்திரைகள் விடுக்கப்பட்டுள்ளன. சென்றவருடத்தில்வெளியானகடைசித்தபால்முத்திரை யேசுசபைஸ்தாபகரான அர்ச். லொயலா இஞ்ஞாசியார் பரமபதமடைந்த நான்காம்நூற்றுண்டின் ஞாபகார்த்தமாக ஆடிமாதம் 31-ந் திகதியன்று விடுக்கப்படலாயிற்று.

புதியஇனமான தபால்முத்திரைகளை விடுக்கஎண்ணும்போது, அதையிட்டுத் தீர்மானஞ்செய்வது வத்திக்கான் இராச்சிய பாப்பரசரின் கம்மிஷனே. இந்தக் கம்மிஷன் மாதிரிவடிவத்தைத் தெரிவுசெய்து பரிசுத்தபிதாவுக்குச் சமர்ப்பிக்கின்றது. அவருடைய தீர்ப்பே முடிவானதாகும். தற்போது வத்திக்கான் தபால் முத்திரைகள் கஸிமிரு டொபிரேஸ்காஎன்ற பேர்பெற்ற சைத்திரிக மாதுவாலே வடிவமிட்டு நிர்மாணிக்கப்படுகின்றன. ஓர் புதிய தபால்முத்திரையின் விஷயத்தைப் பாப்பாசரின்கம்மிஷன் தெரிவுசெய்துவிட்டதும் அதன் அங்கீகாரத்துக்கென்று இந்தமாது அநேகமாதிரி வடிவங்களைச் சமர்ப்பிக்கின்றாள். முன்பு வத்திக்கான் தபால் முத்திரைகளின் மாதிரி வடிவங்கள் கொரூடோ மெஸானுஎன்ற இத்தாலிய சைத்திரிகரால் தயாரிக்கப்பட்டு வரலாயின. 1929-ம்ஆண்டு இந்தப்பணியில் அமர்த்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமைத் தபால்

# இளங் கிறிஸ்துவத் தொழிலாளர்களின் சர்வதேச மகாநாடு

## 24, 25 ஆவணி — 1957

(எழுதியவர்: சகோதரர், ஜோய் கிறிசோஸ்தம், விசுவாசப்பரப்புதல் கல்லூரி, ரோம்)

**இயக்கத்தின் வரலாறு:** முப்பது ஆண்டுகளுக்குமுன் பெல்ஜிய நாட்டின் சிறியவூர்ஒன்றில் ஓர்குருவானவரும், சிலஇளங்கிறீஸ்துவ தொழிலாளிகளும் இ. கி. தொ. என்று நாம் காணும் மாபெரும் இயக்கத்திற்கு விதையூன்றினர். ஆரம்பத்தில் இத்தகைய ஒருஇயக்கம் அருவருப்பாகவும், வெற்றிகாண முடியாததாகவும் புலப்பட்டது. கைகூடமுடியாத கனவாகத் தோன்றியது. ஆனால், அமைப்பைநிறுவிய மொன்சிஞ்ஞோர் கார்டைன் சுவாமிகளுடன் ஒத்துழைத்த நல்லோர்களின் மறைபரப்பும் வேட்கையால் இயக்கம் எல்லாக் கத்தோலிக்க நாடுகளிலும் வேரூன்றி விட்டது. இ. கி. தொ. இயக்கம் பெல்ஜியம், பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, ஸ்பெயின், ஹலந்து முதலிய மேற்குநாடுகளிலும், கிழக்கே இந்தியாவிலும், இலங்கையிலும், ஏனையநாடுகளிலும் பரவியிருக்கிறது. ஐந்துகண்டங்கள் முழுவதிலும் 87 நாடுகளில் இதன் அமைப்பு நிலைத்துத் தழைக்கிறது.

இ. கி. தொழிலாளர்களின் பல்வேறுகிளைகள் பெல்ஜியநாட்டின் பிறசெல்ஸ் நகரிலுள்ள சர்வதேச இளங்கிறீஸ்துவ தொழிலாளர்களின் இயக்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. மாநிலம் முழுமையுமுள்ள கத்தோலிக்க தொழிலாளர்கள் ஒன்றுபடவும், உடல், ஆன்மஉதவிகளை ஒருவருக்கொருவர் செய்துகொள்ளவும் இது சிறந்தஓர்வாய்ப்பாகும். உத்தம கத்தோலிக்க வாழ்க்கைநடத்த இது பெரும் உதவியாகும். தாங்கள்கிறீஸ்துவின் ஞானஉடலில் பங்குடையவர்கள் என்பதும், இன்பதுன்பங்களிலே ஒருவருக்கொருவர் கலந்துகொள்ளும்படியான உடன்பிறந்தவர்கள்என்பதும், தங்கள் வாழ்க்கைச் சிக்கல்களையும், வளம்பெறும் நம்பிக்கைகளையும் தங்களுக்குள் பகிர்ந்துகொள்ளும் நண்பர்கள் என்பதும் இ. கி. தொ. இயக்கத்தினுல் தொழிலாளர்களுக்குக்கிடைக்கும் நல்லெண்ணங்களாகும்.

இப்பெரிய அமைப்பின் கருத்து இளந்தொழிலாளர் அனைவரினதும் நல்வாழ்வேயாகும். கிறீஸ்துவதொழிலாளரின் உள்ளங்களில் அரசாளச் செய்தலே, கிறீஸ்துவமக்கள் இனத்தில்—குறிப்பாக இனத்தின் பொருளியல்துறையில் அரசாளலே கழகத்தின் முதல்நோக்கம்.

இரண்டாவதாக, மனிதனின் தகுதியையும், ஆள்தன்மையையும் (Personality) காப்பது. வெளிப்படையாகச்சொன்னுல் மனிதனை விலங்காக்கும் பொதுவுடைமையின் தீமைகளை எதிர்த்து வெல்வது. மனிதன் உடலும், ஆன்மாவும் உடையவன். ஆன்மாவே முதல்சிறப்பு உடையது. பொதுவுடைமை ஆன்மாவைமறுக்கிறது. அதனுல், மக்களை மதிப்பதில்லை. பொதுவுடைமையின் கொடுமைகளை உணர்ந்த கத்தோலிக்கமக்கள் அதை வேரோடு சாய்த்தேதீருவார்கள்.

**ரோமில் இ. கி. தொ. விழா:** ஆவணியில் சகலகண்டங்களிலுமிருந்து 30,000 இளந்தொழிலாளர்களை வரவழைத்துத் திருமறைத் தந்தை பாப்பரசரின்சமுகத்தில் பெருங்கூட்டத்தைக்கூட்டியது,மொன்சிஞ்ஞோர் கார்டைன்சுவாமிகளின் கைகூடிய பெருங்கனவர்கும். பல்லாயிரம் பெருமக்களின்திரள் விசுவாசஉறுதியைப் புலப்படுத்துகிறது. பல்வேறுநாடுகளின்பிரதிநிதிகளைச் சந்தித்துப்பேசவும், அழகியநிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கவும் அதிர்ஷ்டம்பெற்ற எங்களுக்கு இவைகளைமறப்பது எளிதானகாரியமன்று. அவர்களின்பக்தியுருக்கமும், ஞானஆட்சிமீது அவர்கள் கொண்டுள்ள உணர்ச்சியும் பாப்பரசரைமட்டுமன்றி ரோமிலே இவ்விழாவைக்கண்ட ஒவ்வொருவரையும் கவர்ந்துகொண்டன. இக்காட்சியைக் கண்டபிறகு நாம் உலகமனந்திரும்புதல்மீது மிகுந்தநம்பிக்கையைஅடைந்தவர்களாகத் திகழ்கிறோம். ஒரேஆயனும், ஒரேமந்தையும் கைகூடுவது விரைவிலே நனவாகிவிடுமென ஊக்கம்எழுகிறது.

ஆவணி 24-ந்திகதி சனிக்கிழமை மன்ருட்டுகளின்நாளாகத்திகழ்ந்தது. காலையில் ஒவ்வொருதொழிலாளியும் பூசைகண்டு, உலகிலுள்ளதொழிலாளிகளின் நலன்களுக்காகவும், அவர்களின் குற்றங்கள், தவறுகளுக்குப் பரிகாரமாகவும் இறைவனை மன்ருடினர். மன்ருட்டு, ஒறுத்தல் இவைகளில் தங்கள்கருத்தைஊன்றி, மாலை வேண்டுதலின் நிகழ்ச்சியில் உலகத்தோடு உள்ம்ஒன்றிக் கலந்துகொண்டனர். ஒருமணிஞானஒடுக்கம், சுடர் விளக்குஊர்வலம், சிலுவைப்பாதை (இது வேதசாட்சிகள் உயிர்தந்த கொலசேயம் என்றஇடத்தில்) நடைபெற்றன.

ஒருமணிஞானஒடுக்கம் ஏழேகாலிலிருந்து எட்டேகால்வரை நிகழ்ந்தது. [illegible]யமாபெருங் கிறகோரிகோவிலில் ஆங்கிலம் அறிந்த இ. க. தொ. உறுப்பின[illegible]ளோடு இலங்கையரும் சேர்ந்துகொண்டனர். விளக்குஊர்வலங்கள் எட்டேகாலுக்குத்தொடங்கின. பதினுன்குவேறுவேறுகோவில்களிலிருந்து விளக்குகளைக் கையில் ஏந்தி வேண்டுதல்செய்தும், பாடிக்கொண்டும் கொலசேயம்நோக்கித் தொழிலாளிகள்நடைகொண்டார்கள்.

கொலசேயத்திலே ஒருபெரிய சிலுவை நாட்டப்பட்டிருந்தது. பலபல கூட்டங்கள்கொண்டுவந்த பதினுன்கு சிலுவைகள் அதனைச்சூழவர வைக்கப்பட்டன. யாவருந்திரண்டபின் வேறுஇரண்டுசிலுவைகள் கொண்டு வரப்பட்டன அமைதியின் சூழ்நிலையில். இவற்றுள்ஒன்று தொழிலாளிகளின் இடர்களையும், தேவைகளையும் விளக்க. மற்றொன்று திருமறைக்காகத் துயரப்படும் — குறிப்பாக இரும்புத்திரையின்பின்னுல் நலியும்இளந்தொழிலாளிகளின் இன்னல்களை விளக்க. மொன்சிஞ்ஞோர் கார்டைன் பெருந்தகையின் முன்னுரைமன்ருட்டோடு சிலுவைப்பாதை தொடங்கலாயிற்று. ஒவ்வொருஸ்தலத்திலும் சிறுதியானம் படிக்கப்பட்டது, ஒவ்வொருமுறையும் வெவ்வேறுமொழியில். மேனுட்டுமுக்கியமொழிகளோடு இருஆபிரிக்கமொழிகளும், இந்தியாவின்ஹிந்தியும்இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. சிலுவைப்பாதைக்குப் பின் விசுவாசமந்திரம் பாடலாகமுழங்கிற்று. சிலுவையின் வலிமையையும், பலி, ஒறுத்தல் இவைகளின் பொலிவையும் இப்பாடல் உள்ளங்களில் நினைவுறுத்தியது.

**ஞாயிறு நிகழ்ச்சிகள்:** ஆவணி மாதம் 25-ந்திகதி ஞாயிறுநிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. காலைப்பூசையைத் திருயாத்திரையாக வந்ததொழிலாளர்யாவரும் தூயஇராயப்பர்கோவிலில் காணலாயினர். மக்களின்மீட்சிக்காக ஒவ்வொருநாட்டினர், இனத்தவர், மொழியினர் யாவருக்கும் பூசையைஒப்புக்கொடுத்தனர்.

தங்கள் அன்ருட வாழ்வையும், தொழிலையும்விளக்கும் நிகழ்ச்சிநிரலைப் பொதுமக்களுக்கு வழங்கினர் கோவிலுக்குவெளியே. பத்துமணியிலிருந்து, நாலுமணிவரை மக்கள்திரள் போரூறென வழிந்தோடியது. ஒவ்வொருநாட்டினரு[illegible]ம் நிற்கவரிசைகள் வகுக்கப்பட்ட[illegible] இலங்கையர் ஆங்கிலம்பேசும்குழுவோடுநின்றனர். இவ்வகுப்பு நமதுபாப்பரசரின் அழகிய அரியணைக்குஅருகே அமைந்ததால் எம்உள்ளம் குளிர்ந்தது. ஹங்கேரியர்களுக்கு வழங்கப்பட்ட கைதட்டல் வானைப்பிளந்தது. அவர்கள் தங்கள்நாட்டுக்கொடியை அரைப்பகுதி தாழ்த்திச்சாய்த்து ஏந்திவந்தனர். அதில் கறுப்புச்சிறுதுணியும், ஒரு செண்டும் தென்பட்டன. பொதுவுடைமையின் கட்டுகளை அறுத்து விடுதலைக்காகப் போராடவிரும்பிய இளைஞர்களைக் குருதிசிந்தச் செய்த கொடுமையை அவ்வறிகுறிகள் விளக்கின.

முரசுமுழங்க மேடையைநோக்கிப் பல்வேறுநாட்டுப்பிரதிநிதிகள் விரைந்தனர். அடுத்து இ. கி. தொ. கூட்டுக்கழகங்கள். அதன்பின் இ. கி. தொ. குழுவினர். இவர்கள் நாட்டின்படியும், மொழிப்படியும் அணிவகுத்துநின்றனர்.

துருத்திகள் இசைத்தன. முரசுகள்அதிர்ந்தன. ஒலிபெருக்கியானது "இளங்கிறிஸ்துவத் தொழிலாளிகளே, அழைக்கிருர் உங்களைப்பாப்பரசர்"எனச் செய்திவிடுத்தது. தத்தம்மொழிகளில் விடைதந்தனர் அவர்கள்: "காணீர்இதோ" என்று. ஒவ்வொருவரும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்துநின்றனர். நாடுகள்நாடுகளாக மேடைமீது தத்தம்இடத்திற்குச் சென்றனர்.

செய்யும்தொழில், அதைஇறைவனுக்காக ஆற்றும்கருத்து, மக்களின் மீட்சிமீதுகவலை இவைகளை ஆட்டங்களாலும், பாடல்களாலு[illegible] மேடையில் புலப்படுத்திக்[illegible]டினர். முடிவில் மெய்மறைத்தந்[illegible] பத்திநாதர் நாற்காலியில் சுமக்கப்பட்டுச் சுவிஸ் காவலர்அணிவகுக்க வந்துசேர்ந்தார். வாழ்க, பாப்பரசர்எனப் பலமொழிகள் முழக்கஞ்செய்தன.

**மஸ்கோதிகைக்கும் மாபெரும் உறுதி:** உலக இ. கி. தொ. தலைவர் பற்றிக் கீகன், துணைத்தலைவர் மரியா மீஸ்மன்மேடையேறிக் குழுமியிருந்த எல்லா இ. கி. தொ. கழகங்களினதும் சார்பாகத் தங்கள்கீழ்ப்படிதலையும், நிலைமாருத்தொண்டையும் பாப்பரசருக்குத் தெரிவித்துக்கொண்டனர். எண்ணற்றஇவர்கள் ரோமுக்குப்பிரமாணிக்கமாகத் தாம்என்றும்வாழ்வதாகக் காட்டியஇக்காட்சி பாப்பரசருக்கு உள்ளம்குளிரும் உயரியகாட்சி என்னவேண்டும். அவர் பிரான்சிய மொழியில் முக்கால்மணிநேரம் அவர்களுக்குச் செய்தியளித்தார். அமைப்பின் பெயரைவிளக்கி மற்றும்பல கருத்துகளை வன்மையாக உள்ளத்தில் பதித்தார். முடிவில், "நீங்கள்இளைஞர்கள், கிறிஸ்துவர்கள், தொழிலாளிகள்"என எடுத்துக்காட்டினர். கூடியிருந்தமக்கள் மெய்மறந்து சொற்பொழிவில் ஈடுபட்டனர்.

இறுதியாக எல்லாமொழிகளிலும் உறுதிமொழி படிக்கப்பட்டது. மஸ்கோதிகைக்கும் மாபெரும் உறுதி அது. "நான் உறுதியளிப்பது, ஒவ்வொருநாளும் இளங்கிறிஸ்துவ தொழிலாளிகளின் குறிக்கோளை மேலும்மேலும்பின்பற்றி என்குடும்பம், சூழ்நிலை, தொழில் அல்லது பள்ளி, என் பொழுதுபோக்கு, நட்புக்கூட்டுறவு, எதிர்காலவாழ்வுக்கான முயற்சி யாவற்றிலும் வாழ்ந்துகாட்டுவேன். ஒவ்வொருகண்டம், இனம்ஆகியவைகளின் இளங்கிறிஸ்துவத்தொழிலாளிகளோடு இணைந்து என்கூட உழைப்போர் அனைவரையும் இந்தக்குறிக்கோளுக்கு அடைந்துதர உறுதிதருகிறேன். இறைவனின் அருள்உதவியால் நான்என்உறுதிமொழிக்கு இணங்கி நடப்பேன்"

**யாழ்ப்பாணமே கேள்:** இளந் தொழிலாளிகள் யாழ்ப்பாணத்தில் தங்கள்உழைப்பின் தகுதியையும், கடமையையும் உணர்ந்திருப்பர். இவைகளை உணராதவர்களுக்கு இந்தரோமைமகாநாடு விழிப்பைப்பெற்றுத் தரட்டும். ஒருகால் நம்மேற்றிராசனத்தில்இவ்வமைப்புஇல்லாவிடினும், தங்கள்வளமான எதிர்காலத்திற்காக இணைந்துகொள்ள வேண்டும். நீங்களே வருங்காலமக்கள். இன்றுஇணையாவிடில் என்றும்இணையீர்கள். நமது ஆண்டவரின்மொழிகள் உங்கள்வாழ்வை வழிநடத்தட்டும். பொதுவுடைமையின் கொடுமைகள்வெளிப்பட்டு உண்மை நிலைக்கவேண்டும். கிறிஸ்துவே உண்மை, வழி, வாழ்வு.

---

### மக்கள் பீதியடையப்படாது

"உலகமே இதுவரை கண்டுகேட்டறியாத பலம்பொருந்திய பறக்குங் குண்டுஒ[illegible]ச்செய்வதில் நாம்வெற்றி கண்டுள்ளோமென்ற சோவியற்தலைவர்களின் பிரசாரத்தைக்கேட்டு மேற்கு ஜேர்மன்மக்கள் பீதியடையக்கூடாது" என்று அதன்பிரதமரான டக்றர் அடனோர்அவர்கள் சென்ற 1-ந்திகதியன்று கூறியிருக்கின்றூர். "ஐக்கியநாடுகளின்பொதுச்சபையில் ஹங்கேரியப்பிரச்சினை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது; அத்துடன் மேற்கு ஜேர்மனியின் பொதுத்தேர்தலும் புரட்டாசிமாதம 15-ந்திகதி நடைபெறவிருக்கிறது; இவைகளையெல்லாம் முன்னிட்டுப் பூச்சாண்டிகாட்டித் தனதுகட்சிக்குப் பலந்தேடுங் கொள்கையை இப்பொழுது ருஷியா அனுட்டிக்கிறது; ருஷியாவின் மிரட்டலுக்குப் பயப்படஉலகம் அவ்வளவு பலமிழந்ததாகி விடவில்லை" என்றும் அவர் கூறலாயினர்

* * *

பிற்பட்டவயதிலே குருத்துவ அழைத்தலை மேற்கொள்ளுகிறவர்களுக்கென்று ரோமாபுரியில் இருந்துவருகின்ற பீடாகுருமடமானது தற்சமயம் 35 ஆங்கிலமாணவர்களையும், 10 ஐரிஷ்மாணவர்களையும், 3 அமெரிக்கமாணவர்களையும், ஒரு சீனமாணவனையும், ஓர் தென்மார்க் மாணவனையும் கொண்டிருக்கிறது. இவர்களின் சாரசரிவீதமான வயது 40. இவர்களில் நூற்றுக்கு 35 விகிதமானேரும் மனந்திரும்பியவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



**அருமைச் சகோதரங்களே !**

அண்மையில் குடியேற்றத் திட்டப்பகுதிகளில் ஒன்றைப் பார்வையிடச் சந்தர்ப்பங் கிடைத்தது. முன்காடாயிருந்த இடங்கள் இப்பொழுது செந்நெற்களனிகளாகவும், தோட்டங்களாகவும் செழிப்புற்று விளங்குகின்றன.

அவ்விடங்களிற் குடியேறும்மக்களுக்கு வீடுகட்டிக்கொடுத்திருக்கிறார்கள். காடுவெட்டவும், விதைக்கவும் உதவிகிடைக்கின்றது. அங்கு கல்விகற்றவர்களுக்கும் ஒருகுடியேற்றத்திட்டம் உண்டு. தேனுடன் மருந்துகொடுப்பதுபோல, கல்விகற்றவாலிபரைக் கமத்தொழிலில் ஈடுபடச் செய்வதற்கு அரசினர் சிலசலாக்கியங்களையும் கொடுத்தனர்.

அங்கு சென்றவர்களிற் சிலர் கஷ்டமானவேலை செய்யமாட்டாமல் குடியேற்றத்தைவிட்டு, தமது வயல்கள் தோட்டங்களையும் அரைப்பருவத்திற்கைவிட்டு வெளியேறினர். அதிகமானோர் பொறுதியுடன்பலனை எதிர்பார்த்து ஊக்கத்துடன் உழைத்தனர். அப்பொழுது பாடுபட்டுவிதைத்தனர்; இப்பொழுது ஆடிப்பாடி அறுவடை செய்கின்றனர்.

தமிழ்நாட்டின் எதிர்காலம் கமத்தொழிலிலும், கைத்தொழிலிலும் தங்கியிருக்கின்றது. இதை உணர்ந்து முயற்சியில் முந்துவோர் சிறப்படைவர்.

உங்கள் அன்புள்ள,

அண்ணை.

---

## சந்தேகச் சந்நியாசி

(முன் தொடர்ச்சி)

நாள்கள், வாரங்கள் ஆகின; பண்டிதரும், யாத்திரிகரும் அந்திரேசுவாமியைச் சந்தித்து அவருடையபுத்திபோதரவுகளையும், ஆசியையும்பெற்று ஆனந்தமாய் வீடு திரும்பினர். பிறர்மனப்புயலை மாற்றியவர் தாமே மனப்புயல் நிறைந்திருந்தார். இரவெல்லாம் மாதாவின் மாடத்தில் மன்றாடினாலும் அது தணிவதாயில்லை.

மடாதிபரைச் சந்தித்த சிலநாட்களின்பின் திரும்பவும் அவரைச் சந்திக்கச் சென்றார். மடாதிபருக்கு விடயம் விளங்கிற்று. "எவ்வளவுகாலத்துக்கென்று நான் ஆசாட்பூதியாய் இருக்கலாம்? இம்மடத்தில் எனக்குப் பற்றுமிகுதி; இந்தத்தியாகத்தையும் தேவன் கேட்க[illegible]க்கும்" என்றார் அந்திரே.

"எங்கு செல்கிறீர் அந்திரேசு?"

"இந்நதிக்கரையில் இருமைல்களுக்கப்பாலிருக்கும் தொழுநோயாளர் குடியிருப்புக்கு. அங்கு மிகவும் நொந்துபோயிருக்கும் நோயாளரைப் பராமரிக்க ஒருவர் தேவையாம். நான் அவர்களுக்கு ஆத்தும உதவியும் செய்யலாம்."

சொற்பகாலஞ்சென்றபின் டொம் அந்திரே மக்கள் ஞாபகத்திலிருந்து அழிந்துவிட்டார். ஆனால், தொழுநோயாளர் குடியிருப்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அவருடைய பெயர் அடிபட்டது. அனாதரான அந்நோயாளருக்குத் தேவையான மருந்து, ஊண், உடை முதலியன தேடுவதற்குப் பாடுபட்டு உழைக்க வேண்டியிருந்தது. தச்சுவேலையில் எவ்வளவுதிறமை அடைந்திருந்தார் என்றால் அயலூரவர் அவரை அரைநேரம் ஓயவிட்டாரில்லை.

காலம் ஓடிச்சென்றது. இடையிடையே அந்திரேயின் பழையமடத்தில்உள்ள முதியநண்பர்கள் ஒருவருக்குப்பின்ஒருவர் இறந்ததை ஆலய மணி அறிவித்தது. ஒவ்வொரு ஞாயிறு வாரமும் கடன்திருநாட்களிலும் சொத்திகள், கூன் குருடுகளுடன் அவர்களுடைய பாவிப்புக்குளன இருந்த தொழுநோயாளர் ஆலயத்திற்குவரும் மனிதன்யாரென மடாதிபரைத்தவிர வேறெவரும் அறிந்திலர்.

முந்தியமடத்திலுள்ள மாதா மாடத்தில் தச்சனுக்கு வேலையொன்றிருந்தது. மடாதிபர் ஒருசகோதரரைத் தொழுநோயாளர் குடியிருப்புக்கு அனுப்பினர். வாள், சுத்தியல் சகிதமாய் அந்திரே மடத்திற்குவந்தபோது சகலசுத்தவாளர் திருவிழாவாயிருந்தது.

"மடாதிபர் இப்பொழுதுதான் பூசை ஒப்புக்கொடுக்கப் போகிறார். முடியும்மட்டும் காத்திருக்கும்படி வேண்டுகிறார்" எனக்கூறினர் வாயில் காக்கும் சந்நியாசி. அந்திரேயைப் பெயர்பெற்ற மாதாவின் மாடத்திற்கு அழைத்துச் சென்றார். சந்நியாசிகளுக்குப்பின் ஒரு மரஆசனத்தில் போயிருந்தார் அந்திரே. மடத்தைவிட்டுப் போனதெல்லாம் மறைந்துவிட்டதுபோலிருந்தது. மாதா தலையில் இருந்தமுடி முன்னொருபோதும் இப்படி இலங்கியதேயில்லை. காலைக் கதிரவனின் ஒளிபட்டு பளிச்சென விளங்கியது.

மடாதிபர் சபையைப் பார்த்துத் திரும்பினார். அந்திரே விடைபெற்றபொழுது கா[illegible]போலக் கறுத்திருந்த அம்மடாதிபருடைய தலை பஞ்சுபோல வெளுத்திருந்தது. "கர்த்தர் உங்களுடனே" எனக் கிண்கிணிநாதமாய்ப் பாடினார் மடாதிபர். "உமது ஆத்துமத்துடனேயும்" எனத் தன்னை அறியாமலே உத்தாரம்பாடினார் அந்திரே.

நிருபம் வாசிக்கக்கேட்டு, பலியில் தாமும்சேர்ந்துவிட்ட உணர்ச்சிபெற்றார் அந்திரே.

"கர்த்தருடைய சுத்தவாளரே, அவருக்குப் பயப்படுங்கள்; ஏனெனில், அவருக்குப் பயப்படுபவர்களுக்கு ஒருகுறையுமில்லை." "கர்த்தரைத் தேடுகிறவர்களோஎனில் ஒருநன்மையையும் இழந்துபோகார்கள்" என்னும்வாக்குகள் அந்திரேயின் ஞாபகத்தில் வந்தது. கேட்கிறவர்களுக்குக் கிடைக்கும்என்பது தேவவாக்கு அன்றோ. அப்படியிருக்கத் தேவவசிகரத்துக்குஒப்பனை ஏன்தேடினேன்? என்ன மதியீனம்! என எண்ணிக் கொண்டார் அந்திரே.

(வளரும்)

---

## ஓவியனுக்கிய ஓவியம்

— ம. ப. —

அருளும், அவன்தாயும் வறுமைப் பேயிற்பிடிபட்டு அல்லலுறும் ஏழைகள். அவர்கள் கனவூர்என்னும்நகரில் வசித்து வந்தார்கள். அருளுக்குப் பதினான்குவயது இருக்கும். ஆனால், அவன்அறிவை அறுபதுவயது முதியவருக்கும் மேலாகச் சொல்லலாம். அவனுக்கு அப்பா இல்லை. அவனுடையதாய் ஒருசெல்வந்தர் வீட்டில் வேலைசெய்து வந்தாள். அந்தச்சிறு ஊதியமே தாயையும், மகனையும் காப்பாற்றிவந்தது.

கனவூரை, கலையரசர்என்றஅரசர் ஆண்டுவந்தார். அவருக்கு அழகுள்ள ஓவியங்களின்மீது விருப்பம்அதிகம். அவரைக் கலையரசர்என்று அழைப்பது பொருந்தும். அவர் அரண்மனையை, அழகியபடங்களால் அலங்கரித்து அழகுபார்ப்பவர் அவர் அதற்காக ஆயிரமாயிரமாகச் செலவுசெய்வார். ஒருமுறை "எவரேனும் அழகாகவும், புதியதாகவும், யாரும்இதுவரை வரையாத படமாகவும், பிறர் பார்த்துக் குறைசொல்ல முடியாததாகவும் உள்ளபடங்கள் எழுதிக் கொண்டுவந்தால் அப்படங்களில் மிகவும் அழகான ஒருபடத்தை அரண்மனையில் யாவரும் பார்க்கக்கூடிய ஓர் பொதுஇடத்தில் ஓராண்டுவரையில் வைப்பேன். அதற்குள் அப்படத்தில் குறைஏதாவதுஇருந்தால் அதை யார்வேண்டுமானாலும் குறிப்பிடலாம். அப்படிக் குறிப்பிட்டவர்க்கு ஆயிரம்பொன் பரிசளிக்கப்படும். ஓராண்டிற்குள் அப்படத்தைப்பற்றி யாரும் குறைகூறிவிட்டால் அப்படத்தை எழுதினவருக்கு ஆயிரம்பொன் அளிக்கப்படும்" என்று பறைசாற்றுவித்தார்.

விளம்பரத்தைஅறிந்ததும் அநேக ஓவியக்காரர்கள் அரசருக்கு ஏராளமானபடங்களை அனுப்பினர். அவைகளில் ஒன்றுகூடப் பிடிக்கவில்லையாதலின் அவர் எல்லாப்படங்களையும் திருப்பி அவரவர்களுக்கே அனுப்பிவிட்டார். ஒருநாள் இருபதுவயதுள்ள ராஜு என்னும் இளைஞன் ஒருதுணியில் சோளக்கொல்லையில், குருவிஒன்று சோளக்கதிரின்மேல் உட்கார்ந்து சோளத்தைத் தின்பதுபோல் எழுதி அரசருக்கு அனுப்பினான். அப்படத்தைக் கண்ட அரசரும், மற்றவர்களும் ஆச்சரியமடைந்தார்கள் ஏன்? அந்த ஓவியத்தில் உயிருள்ள ஒருகுருவி சோளக்கதிரில் உட்கார்ந்து இருப்பதுபோல் தீட்டப்பட்டிருந்தது. அரசர் அவ்ஓவியத்தைத் தம்முடைய அரண்மனையில் எல்லோரும் பார்க்கக்கூடிய இடத்தில்வைத்தார். அதைப்பார்த்தயாவரும் ஆச்சரியம் அடைந்தார்கள். இதில் ஒருகுறையும்இல்லை என்றுசொல்லிப் போய்விட்டார்கள். ஓராண்டுமுடிய இன்னும் ஒரேஒருநாள்தான் இருந்தது. கடைசிநாள் அருள் அரண்மனையை அடைந்து அந்தஓவியத்தை உற்றுப் பார்த்தான், "எல்லோரும்சொல்வதைப்போல் என்னால் இந்தப்படத்தைச் சிறப்பாகச் சொல்லமுடியாது. இதில் ஒரேஒருகுறை உள்ளது" என்று கூறினான். அருளைச் சேவகர்கள் படத்துடன் அரசரிடம் அழைத்துச்சென்று அவன் சொல்லியவற்றையும் அவருக்குச் சொன்னார்கள். அரசர் அருளைநோக்கி, "நீ இப்படத்தில்கண்ட குற்றம் யாது?" என்று வினவினார்.

"அரசே! இந்தப்படம் அழகாகத்தான் இருக்கிறது. ஆனாலும், இதிலுள்ள குற்றம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியதேயாகும். சோளக்கதிரில் ஒருகுருவி உட்கார்ந்தால் சோளக்கதிர் வளையுமே அல்லாமல், இப்படத்தில் இருப்பதுபோல் நேராக இராது. இதுவே இப்படத்தின் குற்றமாகும்" என்றான்.

அரசருக்கு அருள் சொன்னது உண்மைஎன்று தோன்றியது. ஆதலால் முன்அறிவித்தபடி அருளுக்கு ஆயிரம்பொன் பரிசாகஅளிக்கப்பட்டது. அந்த ஆயிரம்பொன் அருளைப் பிற்காலத்தில் குறையின்றி வரையும் ஓர் சித்திரக்காரனாக்கியது.

---

## நினைக்கும் எண்

### கண்டுபிடிக்கும் விதம்

ஏதாவது ஒரு எண்ணை மனதில் நினைத்துக்கொண்டு அந்த எண் பக்கத்தில் இருக்கும் ஆறு கட்டங்களில் எந்த எந்தக் கட்டங்களில் இருக்கிறதோ அந்தக் கட்டங்களை மட்டும் கூட்டினால் நொடியில் நினைத்த எண்ணைச் சொல்லிவிடலாம். எப்படி?

கூட்டுகின்ற கட்டங்களின் முதல் எண்களின் (மேல்வரிசை இடது மூலையில் இருக்கும் எண்) கூட்டுத்தொகையே நினைத்த எண் ஆகும். எங்கே? உங்கள் நண்பர்களுடன் விளையாடிப்பாருங்கள்!

**உதாரணம்:** நினைத்துக்கொண்ட எண் 15 என்று வைத்துக்கொள்வோம். அது 2-வது, 3-வது, 5-வது ஆக மூன்று கட்டங்களில்தான் இருக்கிறது. அந்தக் கட்டங்களின் முதல் எண்கள் முறையே 1, 9, 5 ஆகும் கூட்டுத்தொகை 15. (1+9+5).

| (1) | | | (2) | | |
|---|---|---|---|---|---|
| 3 | 14 | 10 | 1 | 7 | 22 |
| 30 | 8 | 12 | 36 | 4 | 15 |
| 35 | 4 | 36 | 21 | 24 | 6 |

| (3) | | | (4) | | |
|---|---|---|---|---|---|
| 9 | 22 | 35 | 7 | 22 | 10 |
| 16 | 21 | 30 | 30 | 18 | 24 |
| 36 | 12 | 15 | 16 | 35 | 36 |

| (5) | | | (6) | | |
|---|---|---|---|---|---|
| 5 | 8 | 35 | 11 | 18 | 24 |
| 6 | 22 | 17 | 21 | 17 | 36 |
| 36 | 15 | 24 | 30 | 14 | 35 |

— C. D. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவஅழைத்தலின் மகத்துவம்

பிரான்சிஸ்கம்மாள் என்ற ஒரு துரைமகளிருந்தாள். அவளுக்கு 3 பெண்களும், 2ஆண்களுமாக 5பிள்ளைகளிருந்தனர். அப்பிள்ளைகளின் தகப்பனுரோ மிகவும் குடிகாரன். 40 வருடகாலமாய் மகாகுடிகாரனுகி, கெட்டசகவாசங்களை மேற்கொண்டு ஆஸ்திகளையெல்லாம் கண்டபடி செலவழித்தான். சிற்சில சமயங்களில் வீட்டிற்கே வருவதில்லை. சில வேளைகளில் இரவு 11மணிக்கு வீட்டிற்குவந்து மனைவிமக்களை அடித்து வதைப்பான். சட்டிபானைகளை நொருக்குவான். அண்டை அயலாருடனும் மனஸ்தாபப்பட்டுக் கொள்ளுவான். பிரான்சீஸ்கம்மாள் இவையாவற்றையும் பொறுமையுடன் சகித்து, எவ்வளவு குடிகாரனுய், கெட்டவனுய் தன்கணவன் இருந்தாலும், "கல்லானுலும் கணவன், புல்லானுலும் புருஷன்" என்ற மூதுரையின்படி, அவனுக்குத் தான்செய்ய வேண்டிய கடமைகளைச் சுமூத்திரையாய்ச்செய்துவந்தாள். கணவன்செலவழித்ததுபோக மீதமுள்ள ஆஸ்தியில் தன்மக்களுக்குச் சீரியமுறையில் கல்விகற்பித்தாள். அவள் மிகவும் தேவபக்தி உடையவளாதலின் தன் பிள்ளைகளுடன் அனுதினமும் கோவில்சென்று திவ்வியபூசை கண்டு, திருவிருந்தருந்தி வருவாள். குடும்ப செபமாலை தவறவிடாள். என்னே! இறைவனின் திருவிளையாடல். 7வயதுக் கண்மணி ஒருத்தியைக் கொடிய வைசூரிநோய் பறித்துக்கொண்டது. எதுநேரிடினும் கலங்காத மனத்தினளான துரைமகள் "கர்த்தர் தந்தார், கர்த்தர்எடுத்துக்கொண்டார்" என்று யோபுவைப்போலக் கூறிக்கொண்டாள். கடைக்குட்டி மரியாவையும், அவளுக்குமூத்த பிரான்சிஸையும் கர்த்தர் தமதுஉத்தம தேவதொண்டர்களாகத் தெரிந்துகொண்டார். பிரான்சிஸ் யேசுசபையிலுட்பட்டு, ஓர்உத்தம குருவானுர். தமது எசமானுனயேசுவைப்போல் பலரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக அரியபிரயாசைப்பட்டார். அத்துடன் தமது குடும்பத்தின் சீர்கேடுகளை அகற்றும்படியும், உலகபிதாவின் கெட்ட குணங்கள் நீங்குப்படியும் பரலோக பிதாவை அனுதினமும் தமது திவ்விய பலிபூசையில் கண்ணீருடன் வேண்டிவரலாயினுர். மரியாளும் யேசுவின் உத்தமபத்தினியாகி, திருக்குடும்ப கன்னிகாமடத்தில் சேர்ந்து, தமது உலகதாயின்கவலைகளை நீக்கும்படி பரலோகதாயையும், அவர்தம் உத்தம பத்தாவையும், குமாரனையும் உருக்கமாய்ப் பிரார்த்தித்து வந்தா. இரக்கம்மிகுந்த இரட்சகரும் இவர்களின் வேண்டுதல்களுக்குச் செவிசாய்த்தார். 40வருடகாலமாய் ஒருவராலும் திருத்தமுடியாதிருந்த கடும் குடிகாரனை பிலிப்பும் சிறிதுசிறிதாகத் தன்பிழைகளை உணர்ந்து ஒரு வியாழக்கிழமை கோவில்சென்று திவ்விய சற்பிரசாத நாதருக்குமுன்பாக நெடுமுழந்தாட்படியிட்டுப் பொறுதிகேட்டு ஒருகுருவானவரிடம் நல்லபாவசங்கீர்த்தனஞ்செய்து வீடுசென்று தன் மனைவிகாலில்விழுந்து மன்னிப்புக்கேட்டான். மக்கள் இது கண்டுஅதிசயித்தனர். தன்னிலைகண்டு மயங்கிநின்ற மக்கள் இருவரையும் வாரிஅணைத்து உச்சிமோந்தான். பின்யாவரும் தேவாலயம் சென்று தேவனுக்கு நன்றிசெலுத்தினர். தன் இருமக்களினதும் உருக்கமுள்ளமன்ருட்டே தன்கணவனின் மனமாற்றத்திற்குக் காரணம்என அப்பக்தியுள்ளதாய் உணர்ந்தாள். இவ்வின்பசெய்தியைக் கேள்வியுற்ற மரியாவும் பிரான்சீசும் பரிசுத்த திருக்குடும்பத்திற்கும், யேசுவின் திருஇருதயத்திற்கும் நன்றித்தோத்திரம்கூறி ஆனந்தக்கண்ணீர் உகுத்தனர்.

நாமும் யேசுவின் திருஇருதயத்தினதும், பரிசுத்த திருக்குடும்பத்தினதும் அருளடிபணிந்து பிரான்சீஸ், மரியாவைப்போன்று இவ்வுலகஇன்பங்கள் துச்சமென்றெண்ணி இரத்த பாசத்திற்கும், லௌகிககாரியங்கட்கும் இடம்கொடாது தேவஅழைத்தலுக்குக் காதுகொடுப்போமாக!

எம். இம்மனுவேல்,
இளவாலை.

## தெரியுமா?

1. மாட்டுச்சண்டை எத்தேசத்தில் நடைபெறுகிறது?
2. உலகிலே பெரிய நாடக ஆசிரியர் யார்?
3. மூன்று வயதிலே பியானோ வாசி[illegible]த ஒருவர் யார்?
4. அ[illegible]குண்டு செய்வதற்கு உபயோகப்படும் உலோகம் யாது?
5. பிலிப்பைன் தீவுக் கூட்டத்தில் எத்தனை தீவுகள் உண்டு.
6. பல்லுள்ள பறவை எது?
7. உலகில் மிகஉயரம் வளரும் மரம் எது?
8. குடிவெறி மூளையின் எப்பாகத்தைத் தாக்குகிறது?
9. பெண்கொசுக்கள் ஏன் இரத்தத்தைக் குடிக்கின்றன?
10. இலங்கையில் உயர்ந்த மலை எது? உயரம் என்ன?

(விடைகள் வேறுபக்கம்)

● 12-ம்பத்திநாத பாப்பரசர் நிகழ்த்தியுள்ள மகா விசேஷப்பட்ட பேச்சுகளையெல்லாம் தொகுத்துப் "பாப்பரசர் பேசுகின்றுர்" எனும் மகுடநாமத்துடன் புத்தகம்ஒன்று பிரசுரமாகியிருக்கிறது. சிஞ்ஞோர் மிக்காயேல் சினிக்கோஅவர்களால் வத்திக்கான் சாசனசாலையின் ஒத்துழைப்புடன் இந்தப்புத்தகம் எழுதப்படலாயிற்று.

● அணுக்குண்டு, சலவாயுக்குண்டுகளின் பரீட்சைகளினுல் ஏற்படுகின்ற கதிர்இயக்க மரணத்தூசிகள் பரப்பும் பயங்கரவியாதிகளுக்கு மாற்றுமருந்துகள் கிடையாவெனப் பிரபலபிரித்தானிய மருந்துஆராய்ச்சியாளர் எச்சரிக்கை செய்திருக்கின்றனர். இந்த நாசகாரக்குண்டுகளால் ஏற்படும்வியாதிகளைப்பற்றிப் பீதியடைய வேண்டியதில்லையென்று சில அமெரிக்க, பிரித்தானியவிஞ்ஞானிகள் வெளியிட்டுவரும் கருத்தை இவர்கள் கண்டித்திருக்கின்றனர்.

## நன்றித்துதி

எனக்குவந்த காய்ச்சலின்போது ஒருநாள் இரவு தலையில் வாயுஏறி என்னை மிகவும் கஷ்டப்படுத்தியது. நான் மிகவும் பயந்து, பிறேக்நகர் பாலகயேசுவின் படத்தைத் தலையில்வைத்து மன்றுடினேன். ஆச்சரியவிதமாய்க் குணமானது. நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன். பாலகயேசுவை அண்டிப்போகிறவர்கள் பலனடையாமற் போகார்கள்.

யாழ்ப்பாணம் J.

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயநாயகியிடம் நான் கேட்டமன்ருட்டுக் கிடைக்கப்பெற்றது. நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கிறேன். இன்னும் எங்கள்குடும்பத்திலுள்ள அனைவருக்கும்நற்சுகம்கிடைக்க உதவிபுரிந்தருளுமாறு இரந்துநிற்கிறேன்.

தாழ்வுபாடு [illegible]

## மரண அறிவித்தல்

யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச் சங்கம் லிமிற்ரேட்

இல. 4, கண்டி ரோட், யாழ்ப்பாணம் — பதிவு இல. M. 110

கீழ்க்காணும் மேற்படி சங்க அங்கத்தவர் மரணத்திரையினுள் மறைந்ததை மிகவும் விசனத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இறந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மரணசேவைப் பணத்தைச் செலுத்தவும்.

இறந்தவர் இலக்கம்: 444

இறந். பெயர்: வேலுப்பிள்ளை ஞானப்பிரகாசம் தம்பிஐயா
விலாசம்: குருசோரோட், யாழ்ப்பாணம். திகதி: 1-9-57.

த. இராசரத்தினம்,
கௌரவ காரியதரிசி.

## வத்திக்கான் தபால் முத்திரைகள்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டு 1951-ம் ஆண்டு தான் மரிக்கிறவரையிலே இவரே சகல முத்திரைகளையும் வடிவமிட்டு நிர்மாணித்துவந்தார்.

வத்திக்கான் தபால் முத்திரைகள் இத்தாலிய அரசாங்கத்தின் 'பொலிகிறபீக்' என்ற ஸ்தாபனத்தாலே அச்சிடப்படுகின்றன. ஒரேயொருஇனத் தபால்முத்திரைகள்மாத்திரம் — அதாவது வத்திக்கான் தோட்டங்கள்பற்றிய முத்திரைகள்மாத்திரம் வீயென்னுநகரில் அச்சேற்றப்பட்டன. புதியஇனத் தபால்முத்திரைகள் முதன்முறையாகப் பாவனைக்கு வரும்போது அது பற்றிய விபரம் வத்திக்கான் இராச்சியத்தினுள்ளே சென் தமாசுஸ் முற்றத்தில் இருந்துவருகின்ற வத்திக்கான் தபாற்கந்தோரிலும், வத்திக்கான் கவர்னர் மாளிகையிலுள்ள பிரசித்ததலத்திலும், பரிசுத்த ஸ்தானத்தின் அதிகாரபூர்வமானகருமங்களை அறிவிக்கும்பிரசுரத்திலும் பிரசித்தஞ்செய்யப்படுகிறது. புதிய இனமான தபால் முத்திரைகள் விற்கப்படும் போதெல்லாம் ஒவ்வோர் இனத்திலும் 20 முத்திரைகள் கருதினல்மார் திருச்சங்கத்துக்கு உபகரிக்கப்படுகின்றன. நியூயோக்நகர கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவர், திருச்சபை ஆலோசனைச்சபைத் திருச்சங்கதலைவரான கருதினல் சிறியாசி உட்படக் கருதினல்மாருள்ளே மிகுந்த ஆர்வத்துடன் தபால் முத்திரைகள் சேகரிப்பவர்கள் அநேகர் இருக்கின்ருர்கள்.

வத்திக்கான் 1929-ம் ஆண்டுமுதல் சர்வதேச தபால் ஐக்கியசங்கத்தில் அங்கத்துவம் வகித்திருக்கின்றது. அதனுல், தான் புதிதாகவெளியிடும் ஒவ்வோர்இனத்திலும் 300 தபால்முத்திரைகளை அது ஜெனிவா நகரிலுள்ள அச்சங்கத்தின், தலைமைக்[illegible]ரியாலயத்துக்கு அனுப்பிவைக்[illegible], அவைகள் அங்கத்துவ நாடுக[illegible]க்கெல்லாம் அனுப்பிவைக்கப்படுகின்றன. இந்தச் சங்கம் அவற்றிற்குப்பதில் அங்கத்துவ நாடுகளின் புதிய தபால்முத்திரைகளை வத்திக்கானுக்கு அனுப்பிவைக்க, அவைகள் அங்கே தபால் முத்திரைகளின் கண்காட்சிச்சாலையில் காட்சிக்கு வைக்கப்படுகின்றன. தனது முத்திரைகளைப்பற்றிய அட்டவணையை வத்திக்கான் பிரசுரஞ்செய்வதில்லை.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கோடியற்புதரான அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் உதவியால் நான்நேர்ந்துகொண்டகாரியம் கிடைக்கப்பெற்றேன். அர்ச். அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

அரிப்பு பி. ஞானப்பு மியஸ்

JUST ARRIVED FOR SALE

**TRUE DEVOTION TO MARY**

BY

ST. LOUIS DE MONTFORT

Pri[illegible] Rs. 8-50

Postage ·35

*Apply:*

MANAGER,
Catholic Press, Jaffna.

## ஹங்கேரிய சுதந்திரவீரர்கள்

ஹங்கேரிய சுதந்திரப்போராட்டத்தின் முன்னணியில்நின்று அதனைவழிநடத்திய இருஹங்கேரியமாணவர்கள் தற்போது கொழும்பிலே தங்கியிருக்கின்றனர். கம்யூனிஸ்த கட்சியினரோ அன்றேல் அதன் அனுதாபிகளோ யாராயினும்சரி ஹங்கேரியில் நடைபெற்ற சுதந்திரப்போராட்டவிஷயமாய்த் தங்களுடன் விவாதஞ்செய்ய வரும்படி அவர்கள் அன்று திங்கட்கிழமை சவால் விடுத்துள்ளனர். இம்மாணவர்களில் ஒருவர் 22வயதுடைய அல்பார் புஜ்தோசு, மற்றவர் 28வயதுடைய கரோலி தெரெக்ஸி. ஹங்கேரிவிஷயமாக எந்தக்கேள்விக்கும் தாங்கள் விடையிறுக்கத் தயாராயிருப்பதாக இவர்கள் கூறினர்கள். சுதந்திர ஹங்கேரிக்குப் பொதுசனஆதரவைத் திரட்டுமாறு மாணவர் சங்கங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்காகவே இம்மாணவர்கள் இங்கு வந்துள்ளார்கள்.

## உபதேர்தல் வெற்றிமுழக்கம்

வெ[illegible]டஉபதேர்தலிலே தனது கணவரிடமாக வெற்றிபெற்ற திருமதி. குஸுமா இராஜரத்தின அன்றுசெய்த வெற்றிமுழக்கத்திலே "1956-ம்ஆண்டின் பொதுத்தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளுக்கு எம். ஈ. பி. அரசாங்கம் துரோகஞ்செய்துவிட்டது; பிரதமர் சமஷ்டிக்கட்சியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை எனதுகணவர் எதிர்ப்பதைவைத்து இந்தஉபதேர்தலில் போட்டியிட்டேன்; இந்தஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வேண்டுமென்பதே சிங்களமக்களின் விருப்பம்என்பதை இத்தேர்தல்முடிவு காட்டிவிட்டது; இலங்கையில் தமிழ்நாடுஸ்தாபிக்க இந்தஒப்பந்தம்அஸ்திபாரமிடுகின்றது; இது மிகப்பெரியஆபத்தானது: இந்தஒப்பந்தம் சிங்களம்மட்டும் சட்டத்தைமீறுவதுடன் பதினைந்துலட்சம் இந்தியர்களுக்குப் பிரஜாஉரிமைவழங்கவும் வழிவகுக்கிறது; இந்தஉபதேர்தல்முடிபை எச்சரிக்கையாகக்கொண்டு அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துவிடும்படி பிரதமரைக்கேட்டுக்கொள்ளுகிறேன்; இல்லையேல் ஐப்பசி 1-ந்திகதி ஆரம்பிக்கப்படவிருக்கும் சிங்களமக்களின் ஹர்த்தாலுடன் ஏற்படக்கூடிய புதியபொதுத்தேர்தலில் மக்களுக்குப் பிரதமர் பதில்சொல்லவேண்டியிருக்கும்" எனக் கூறலாயினர்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 12-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org